பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD

# வலம்புரி
## The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி 10 | புதன்கிழமை | (27.08.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 251

# பரிஸ் மாநாட்டில் எரிக்சோல் நேற்றுக் கலந்து கொண்டார்

## கனடிய ஆலோசகர்களும் பங்கேற்பு

(பரிஸ்)

**இலங்கை அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகசபை திட்டவரைவு குறித்து சர்வதேச சட்ட நிபுணர்களும், விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டுள்ள பரிஸ் மாநாட்டில் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் நேற்று நண்பகல் கலந்து கொண்டார்.**

இலங்கை அரசினால் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை குறித்த திட்ட வரைபை கடந்த 23-ம் திகதி முதல் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான சர்வதேச சட்டவல்லுநர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

இலங்கை அரசின் இடைக்கால நிர்வாகசபை திட்டவரைபிற்குப் பதில் வரைவு ஒன்றை அனுப்புவதற்காகவே விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும், சட்டவல்லுநர்களும் கடந்த நான்கு தினங்களாக தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று நண்பகல் பிரான்ஸ் வந்த நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் பரிஸில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் மாநாட்டில் கலந்து கொண்டார்.

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கு வழங்கியுள்ள இடைக்

(10ம் பக்கம் பார்க்க)

நல்லூர்த் தேர் உற்சவத்தின் போது பறவைக் காவடியில் அடியார் ஒருவர்



## அடியவர் சமுத்திரம் அலை மோத நல்லூர்க் கந்தன் தேரில் வந்தான்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் தேர் உற்சவம் நேற்று மிகச் சிறப்பாகவும் பக்தி பூர்வமாகவும் இடம்பெற்றது.

இலட்சோப இலட்சம் பக்தர்கள் அதிகாலை முதல் மாலை வரை ஆலய வீதியிலும், சூழலிலும், நிரம்பி வழிந்தனர்.

யாழ் குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும், வெளி மாவட்டங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் வருகை தந்த இலட்சக் கணக்கான பக்தர்கள் புடை சூழ, ஆட்டக் காவடிகள், பறவைக் காவடிகள் அலங்கரிக்க, தங்கரதத் தேரில் எம்பெருமான் பவனி வந்த காட்சி, பார்ப்போரை மெய் சிலிர்க்க வைத்தது. (இ)

## முஸ்லிம்களுக்கென பொலிஸ் பிரிவு முடிவில் எந்த மாற்றமும் இல்லை
### அமைச்சர் ஹக்கீமிடம் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் சேவையில்ஆட்களைத் திரட்டும் நடவடிக்கையில் எவ்வித மாற்றமும் இல்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று அலரிமாளிகையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணப் பாதுகாப்புக்கென பொலிஸ் சேவைக்கு ஆட்களைத திரட்டும் நடவடிக்கைகளுக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாற்று யோசனைகளை முன் வைப்பார்களாக இருந்தால் அவை தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என்றும் பிரதமர் அமைச்சரிடம் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

(10ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு முஸ்லிம்களின் பாதுகாப்பு நிலைவரம்
## பேரியல் அஷ்ரப் இன்று பிரதமரைச் சந்திப்பார்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் பொதுவான பாதுகாப்பு நிலைவரம் குறித்தும் முஸ்லிம் கிராமங்களின் தற்போதைய நிலைவரம், பாதுகாப்பு குறித்தும் தேசிய ஐக்கிய முன்னணியின் அரசியல் பீட உறுப்பினர்கள் நேற்றுக் கூடி ஆராய்ந்துள்ளனர்.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப்பின் இல்லத்தில் நேற்று இக்கூட்டம் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை இன்று சந்தித்துப் பேசுவது தொடர்பாகவும் அப்பேச்சின் போது முன்வைக்கப்படவுள்ள பிரச்சினைகள் குறித்தும் நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளதாக திருமதி பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார். (வ)

## பரிஸில் இன்று ஆர்ப்பாட்டம்

(பரிஸ்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களும், சர்வதேச சட்ட வல்லுநர்களும் இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக பரிஸில் கூடி ஆராய்ந்து வருவதைக் கண்டித்து இன்று அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை ஜே.வி.பியினர் திட்டமிட்டுள்ளனர்.

பரிஸில் உள்ள நோர்வேத் தூதரகம் முன்பாகவே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## நல்லூர்த் தேர் உற்சவத்தில் 6 தாலிக் கொடிகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் தேர் உற்சவத்தை தரிசிக்க வந்த ஆறு பக்தர்களின் தாலிக் கொடிகள் அறுக்கப்பட்டன.

பக்தகோடிகளால் நிறைந்திருந்த நல்லைக் கந்தன் ஆலயத்திலே பக்தர்களோடு பக்தர்களாக கூடியிருந்த திருட்டுக் கும்பல்களால் இத் தாலிக் கொடிகள் அறுக்கப்பட்டுள்ளன.

சில திருட்டு முயற்சிகள் பக்தர்களின் அவதானத்தால் தடுக்கப்பட்டுள்ளதுடன் திருடர்களும் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒரு பெண்ணும், சிறுவனும் நகைகளை திருட முற்

(10ம் பக்கம் பார்க்க)

## ஆட்டோவையும் அதன் சாரதியையும் காணவில்லை என முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் றக்கா றோட்டைச் சேர்ந்த தாவீது ஜெயக்கொடி (வயது-31)என்ற குடும்பஸ்தரையும் அவருக்குச் சொந்தமான முச்சக்கர வண்டியையும் காணவில்லையென அவரது உறவினர்கள் நேற்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின்யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வாடகைக்கு முச்சக்கர வண்டி செலுத்தும் இவர் றக்கா றோட் சந்தியில் தினமும் தரித்து நிற்பது வழக்கம் எனவும் இதன் பொருட்டு நேற்று முன்தினம் திங்கள்கிழமை காலை 9 மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டவர் இற்றைவரை வீடுவந்து சேரவில்லை எனவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை,அந்த முச்சக்கர வண்டியின் இலக்கம் 204-5226 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-4)

## பஸ் கட்டணம் அதிகரிக்கும்

(யாழ்ப்பரணம்)

வட பிராந்திய போக்குவரத்து சபையின் பஸ் கட்டணங்கள் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து உயர்த்தப்படவுள்ளன.

மத்திய போக்குவரத்துச் சபையின் தலைவரின் அறிவுறுத்தலுக்கமையவே பஸ் கட்டணங்கள் உயர்த்தப்படவுள்ளதாக வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதே வேளை பருவகாலச் சீட்டுக்கான கட்டணமும் ஏனைய கட்டணங்களின் அதிகரிப்பிற்கு ஏற்ப மாற்றப்படவுள்ளது. (ந-5)

## குற்றச் செயல்களை ஆராய ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

நாட்டில்.அதிகரித்து வரும் குற்றச செயல்களுக்கான காரணங்களைக் கண்டறிவதற்கு மூவர் அடங்கிய ஆணைக் குழுவொன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நியமித்துள்ளார்.

ஆணைக்குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணியும் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியுமான எஸ்.டபிள்யு.பி. வடுகொடபிட்டியவும் உறுப்பினர்களாகப் பொது நிர்வாக சேவையில் இருந்து ஓய்வுபெற்ற சிரேஷ்ட அதிகாரி சந்திரா விக்கிரமசிங்கவும்,முன்னாள் பொலிஸ்மா அதிபர்,ரி.பி.பிருவ்டி சில்வாவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதிக்கும் விடயத்தில் குற்றச்செயல்கள் இடம் பெற்றுள்ளதா என்பதை ஆராய்ந்து மூன்று மாதங்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி இவர்களைப் பணித்துள்ளதுடன் நாட்டில்

(10ம் பக்கம் பார்க்க)

திருவாவடுதுறை ஆதீனம்

# ஈழத்து சைவ சித்தாந்த சீலர்களுக்கு பட்டங்களை வழங்கிக் கௌரவிக்கும்

## 23வது குருமகா சந்நிதானம் நல்லையில் திருவாய்மொழி

(யாழ்ப்பாணம்)

நமது பிணிகள்,துன்பங்களுக்கு நாம் செய்யும் வினைகளே காரணமாக இருக்கின்றன.நாம் செய்யும் கருமங்கள் நல்லவையாக இருப்பின் நமது வாழ்வு மகிழ்ச்சியாக இன்பமானதாக அமையும். நாம் செய்த வினைப் படிதான் வாழ்வு கிடைக்குமென்று மனஅமைதி கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் 23வது குருமகா சந்நிதானம் சீர்வாளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் நேற்றைய தினம் நல்லை திருஞான சம்பந்த ஆதீனத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்.ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அங்கு மேலும் உரையாற்றிய சுவாமிகள், நேற்றுமுன்தினம் நடைபெற்ற மண்டலாபிஷேக நிகழ்வில் கலந்து கொண்டு எமது மக்களுக்கு ஆசி வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டதற்கிணங்கவே நாம் இங்கு வந்துள்ளோம்.

நமது சமய நூல்களில் சாஸ்திரமும் தோத்திர நூல்களும் மிக முக்கியமானவை. சாஸ்திரங்கள் 16 உள்ளன. இவற்றையெல்லாம் கற்பதற்கு சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சிமையம் எனும் அமைப்பை ஆரம்பித்து 12 ஆண்டுகள் சைவ சித்தாந்தத்தினை கற்றுக் கொடுத்து வருகின்றோம்.

நாம் நாள் தோறும் பிறருக்கு உதவி, சிவாலயவழிபாடு, சிவனடியார் தொண்டு போன்ற சமய ஒழுக்கங்களைக் கடைப் பிடிக்கவேண்டும்.

எம் வாழ்வில் ஏற்படும் பல்வகைத் துன்பங்களை நீக்குவதற்குத் திருமுறைகள் துணை செய்யும். ஈழத்துச் சைவப்பெருமக்கள் ஆதீனத்துடன் பல வழிகளிலும் தொடர்பு கொண்டுள்ளனர்.அதனால் தான் 15 வது குருமகா சந்நிதானம் அவர்கள் ஆறுமுக நாவலருக்கு பட்டத்தை வழங்கினார்கள்

இனிவரும் காலங்களில் ஆண்டுக்கொருமுறை செய்ய விருக்கும் குருவிஜய சமயததின் போது ஈழத்துத்தமிழ் அறிஞர்களுக்கு சைவசிததாந்த சீலர்களுக்கு பட்டங்கள் வழங்கி கௌரவிக்கவுள்ளோம்.

பல்கலைக்கழகங்களில் சைவ சித்தாந்த ஆராய்ச்சிகளைச் செய்யக் கூடிய மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.அவர்களுக்கு வேணடிய உதவிகள் எம்மால் செய்யப்படும் என்றார்.

இந்நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்,

திருக்கேதிஸ்வர மண்டலாபிஷேக பூர்த்தி விழாவில் கலந்து கொள்வது தான் சுவாமிகளின் பிரதான நோக்கமாகும்.சுவாமிகளின் திருவடிகள் எம்மண்ணில் முதன் முறையாகப் பதிந்துள்ளன. எமது நாட்டில் சைவ சமயத்தில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் யாவும சுவாமிகளின் வருகை மூலம் நிவர்த்தி பெறும் என நம்புகின்றேன்.

600 ஆண்டுகள் பழமை வாய்ந்த திருவாவடுதுறை ஆதீனம் எண்ணற்ற சைவப்பணிகளை ஆற்றிய பெருமை வாய்ந்தது.இன்று எமது மண்ணிலும் இப்பணிகள் ஆரம்பிக்கப்படவேண்டும். எமது மக்களுக்கு சுவாமிகளின் ஆசிகள் கிடைக்க வேண்டும்.சுவாமிகளின் வருகை மூலம் நாம் பெருமையடைகின்றோம் என்றார். (உ-7)

## பண்ணிசைக்கோஷ்டி வீதியுலா

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் தீர்த்தத் திருவிழாவன்று அகில இலங்கை திருமுறை மன்றம் வருடாந்தம் நடாத்தி வரும் தேவார பண்ணிசைக் கோஷ்டி வீதியுலா வரும் நிகழ்வு, தீர்த்தத் திருவிழாவான இன்று புதன் கிழமை காலை 7.00 மணிக்கு மன்றத் தேவாரப் பாடசாலை நல்லூர் ஸ்ரீகாமாட்சி மடாலயத்திலுருந்து தேவார விற்பன்னர்களின் பண்ணிசையுடன் புறப்பட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தைச் சென்றடையவுள்ளது. (உ-18)

## நல்லூரில் தொண்டர்களுடன் பொலிஸார் பெரும் ரகளை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயச்சூழலில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொண்டர்களுடன் நேற்று முன்தினம் மாலை பொலிஸார் பெரும் ரகளை புரிந்தனர். இதனால் தொண்டர் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளானார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் நல்லூர் அரசடி வீதி ஆலய நுழைவாயிலில் தொண்டர்கள் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது வாகனம் ஒன்றில் அங்குவந்த பொலிஸார் வீதி மறிப்பைத் தாண்டி ஆலய உட்பகுதிக்குள் நுழைய முயன்றனர். இதற்கு தொண்டர்கள் அனுமதிக்கவில்லை.

இதனால், ஆலயச்சூழலில் கடமையிலிருந்த பொலிஸார் ஆத்திரமடைந்து வீதி மறிப்புக்குப் போடப்பட்டிருந்த தகரங்களையும் பனைமரங்களையும் தள்ளி விழுத்தி தொண்டர்களுடன் ரகளை புரிந்தனர். இதனால தொண்டர் ஒருவர் காயங்களுக்கு உள்ளானார்.

அத்துடன், வாகனத்தில் வந்த பொலிஸாரை உள்ளே அனுமதிக்காதது குறித்து தொண்டர்களுடன் பொலிஸார் வாக்கு வாதத்திலும் ஈடுபட்டனர்.

இதனால்,தொண்டர்கள் தமது பணியை இடைநிறுத்தியதுடன், சம்பவம் தொடர்பாக நல்லூரிலுள்ள பொலிஸார் விடுதியிலும் இராணுவப் பொலிஸாருக்கும் அறிவித்தனர்.

எனினும் பக்தர்களின் நன்மை கருதி தொண்டர்கள் தாமாகவே பணியில் ஈடுபட முன்வந்துள்ளனர்.

இதேவேளை, நல்லூர் ஆலயப் பகுதியில் பொலிஸ் வாகனங்களை அனுமதிப்பதில்லை என பொலிஸாருடனான கிலந்துரையாடலில ஏற்கனவே இணக்கம் காணப்பட்டதாகவும் பொலிஸார் வேண்டுமேன்றே அந்த இணக்கப்பாட்டை மீறி செயற்பட்டதுடன், பெரும் ரகளை புரிந்ததாகவும் பணியில் ஈடுபட்டிருந்த தொண்டர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (த-7)

## தொண்டர் விபரங்கள் கோரப்படுகின்றன

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் சிகிச்சை நிலையங்கள், வைத்தியசாலைகளில் சுகாதார தொண்டர்களாகக் கடமைபுரியும் தொண்டர்களின் விபரங்கள் அடங்கிய பட்டியலை ஒவ்வோர் சுகாதார வைத்திய அதிகாரியின் சிபார்சு அறிக்கையுடன் அனுப்பி வைக்குமாறு உலக சுகாதார ஸ்தாபனம் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரை கோரியுள்ளது.

இவ் அறிக்கையில் மேற்படி தொண்டர்கள் ஆரம்ப சுகாதார பயிற்சி எவ்வளவு காலம் பெற்றார்கள்,எவ்வளவு காலம் தொண்டர்களாக சேவை புரிந்துள்ளார்கள் என்ற விபரங்களையும் தெரிவிக்கும் படி வலியுறுத்தப்பட்டுள்ளது. (உ-252)

## இராணுவத்தில் இணையும் விருப்பு வெகுவாகக் குறைவு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திற்கு 5ஆயிரம் பேரை இணைக்கும் திட்டத்தின் கீழ், இடம்பெற்ற நேர்முகத் தேர்வுகளில் இதுவரையும் 215 பேரே சமுகமளித்துள்ளதாக இராணுவ பேச்சாளர் சரத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இவ் ஆட்சேர்ப்பு அடுத்தமாதம் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மிதிவெடியால் பாதிப்புற்றோர்க்கு மறுவாழ்வு

## திட்டவரைபைத் தயாரிக்க இருவார கால அவகாசம்

(கொழும்பு)

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் நிலக்கணணி வெடிகள், மிதிவெடிகளில் சிக்கிப் பாதிப்புக்குள்ளானவர்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையிலான திட்டவரை வொன்றைத் தயாரித்து இரு வாரங்களில் சமர்ப்பிக்குமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு, நிவாரணம் என்பவற்றுக்கான ஆணைக்குழுவின் தலைவரும், பிரதமரின் செயலாளருமான பிரட்மன் வீரக்கோன் யு.என்.டி.பியிடம் வேண்டுகோள் ஒன்றைவிடுத்துள்ளார்.

அண்மையில் இடம் பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர்,அங்கு தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில், நிலக்கண்ணி வெடிகள்,மிதிவெடிகள் போன்றவற்றால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கல், புனர்வாழ்வளித்தல், சுயதொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் போன்ற செயறபாடுகளை உள்ளடக்கியதான திட்ட வரைபொன்றை விரைவில் யு.என்.டி.பி.சமர்ப்பிக்க வேண்டும்.

முன்னர், நிலக்கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், இவ்வாறான நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குதல், பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளித்தல், உடனடி நிவாரணம் வழங்கல்,சுயதொழில் முயற்சிகளுக்கு உதவி வழங்கல் மற்றும் தொழிற் பயிற்சிகளை வழங்குதல் போன்ற முக்கிய நோக்கங்களை அடிபபடையாகக் கொண்டு யு.என்டி.பி. சமர்ப்பித்த திட்டவரைபை எமது அமைப்பு தீர ஆராய்ந்துள்ளது.

ஆனால், மேற்படி வழங்கப்பட்டுள்ள வரைபில் முக்கியமாக பாதிக்கப்பட்டவர்கள் குறித்த நோககம் முற்றுமுழுதானதாக ஏற்றுக்கொள்ள முடியாதவகையில் உள்ள காரணத்தை புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியேற்றுகை அமைச்சின் செயலாளர் கே.ஜெயரட்ணம் சுட்டிக்காட்டியதை அடுத்து, முழுமைப்படுத்தப்பட்ட பூரணமான இறுதி வரைபை அடுத்த இரு வாரங்களுக்குள் யு.என்டி.பி.சமர்ப்பிக்க வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார். (உ-18)


சிறு விளம்பரம்

**ஆங்கில வகுப்புகள்**

ஆண்டு O/L, A/L மாணவர்களுக்கான வகுப்புகள். பரீட்சைக்கு ஏற்ற முறையில் பயிற்சி, புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. வகுப்பில் கூடியது 15 மாணவர்கள் மட்டும். அனுமதி விக்னேஸ்வரன் ஆச்சாரி. பிளாக் வீதி, சங்கானை. 426 (302) K.K.S வீதி யாழ்ப்பாணம். (7563)


**அ.அட்டை கண்டெடுப்பு**


கொல்ல விளாங்குளம் என்ற முகவரியைச் சேர்ந்த தவராசா மதிவேணி என்பவரது தேசிய அடையாள அட்டை மற்றும் நிரந்தர. பயண அட்டை ஆகியன கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ள முடியும்.







திருவாவடுதுறை ஆதீன 23 ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்தபோது,

அருளாசியுரை வழங்குவதை 1ஆவது படத்திலும், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோருக்கு ஆசி வழங்குவதை 2, 3ஆம் படங்களிலும், நல்லைக்குருமணி அருகில் அமைந்திருப்பதை 4ஆவது படத்திலும் காணலாம்.

### எமது ஆலோசனைகளை ஏற்கத் தவறினால்

# திருமலை குரங்கு பாஞ்சான்குள முகாமை

# வலுக்கட்டாயமாக அகற்றும் நிலைவரும்

## கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் பி.பி.ஸி.க்குப் பேட்டி

(கொழும்பு)

**இன்னும் ஒருவார காலத்திற்குள் குரங்குபாஞ்சான் குளத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் முகாம் அகற்றப்படுமானால் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும்.**

**அவ்வாறு குரங்குபாஞ்சான் குளத்தில் உள்ள முகாம் அகற்றப்படாது விட்டால் ஜனாதிபதி கூறியதுபோல வலுக்கட்டாயமாக முகாம் அகற்றும் நிலையே உருவாகும் என திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் அக்னஸ் பிரகாரெட்டி பி.பி.ஸி. தமிழ்ச்சேவைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.**

இது பற்றி அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

குரங்குபாஞ்சான் குளத்தில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் இச்சின்னஞ்சிறிய முகாமினால் யுத்த நிறுத்தமே கேள்விக்குள்ளாகியிருக்கின்றது. இதனை தமிழீழ விடுதலைப்புலிகளின் பிராந்தியத் தளபதி கேணல் பதுமன் நன்குணர்ந்துள்ளதாகவே எங்களுக்குத் தெரிகிறது.

இதேவேளை, யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு சார்பில் முன்வைத்திருக்கும் புதிய யோசனையில் விடுதலைப்புலிகள் குரங்குபாஞ்சான் குளத்தில் அமைந்துள்ள முகாமினை விட்டு உடனடியாக அகன்று அந்தப் பகுதியை கண்காணிப்புக்குழுவிடம் கையளிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டதாக பல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

இவ்விடயத்தில் ஆச்சரியம் என்னவென்றால், எமக்கும்-விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற இச்சந்திப்பில் எமது தரப்பினரால் முன்வைக்கப்பட்ட இவ்யோசனை இரு தரப்பினரிற்கும் மட்டுமே தெரியும்.

இந்நிலையில், இவ்விடயம் பற்றி பல ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருப்பது எமக்கு மட்டுமல்ல புலிகளுக்கும் தான் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

எனவே, நான் குரங்கு பாஞ்சான் முகாம் விவகாரம் குறித்த செய்தியை உறுதிப்படுத்தவோ, மறுக்கவோ மாட்டேன்.

ஆனால், இந்தப் பிரச்சினை சுமுகமாக தீரவேண்டும். இதற்கு படையினரும், புலிகளும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

(உ-10)

# நல்லூரான் திருவடிக்கு

### (இன்று தீர்த்தத் திருவிழா-25ஆம் நாள்)



## பாவம் தீர்ப்பாய்

ஆவணி அமாவாசை தன்னில்-நீயும்
ஆனந்தத் தீர்த்தத்தை ஆடிக்கொண்டு
பூவடி பட்ட உன்புண்ணிய தீர்த்தத்தால்
பூவுலகில் பாவம் போக்கிடுவாய்

கவிமணி அன்னைதாஸன்

# அண்ணன் அமிரின் பெயரைத் தவிர்த்து

# போராட்ட வரலாற்றை வடிக்கமுடியாது

### சிவாஜிலிங்கம் எம்.பி.உரை

(யாழ்ப்பாணம்)

மறைந்த அண்ணன் அமிரின் பெயரைத் தவிர்த்துவிட்டு தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றை வடிக்கமுடியாது என்று யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாணத் தலைமையகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகமும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான மறைந்த அப்பாத்துரை அமிர்தலிங்கத்தின் 76வது பிறந்த தின நிகழ்வில கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்.பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிவாஜிலிங்கம் எம்.பி.தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தந்தை செல்வாவின் தூர நோக்குச் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் அமிர் அண்ணா என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட அமரர் அமிர்தலிங்கம்.

"என்னால் முடியாது போனாலும் எனக்குப் பின்னால்வரும் சந்ததியினர் தமிழின விடுதலையை வென்றெடுப்பார்கள்" என்று அவர் அன்று கூறியவாறு இன்று விடுதலைப் போராட்டம் வியாபித்து சுயநிர்ணய உரிமையைக் கோரி நிற்கின்றது.

தமிழர்களின் தனித்துவத்தை சிங்கள இனவாதிகளுக்கு உணர்த்தும் வகையில் பாராளுமன்றத்திலும் ஏனைய இடங்களிலும் இவர் குரல் கொடுத்ததை நாம் மறந்துவிடக்கூடாது.வடக்கு-கிழக்கு தமிழர்களுடைய தாயகம் என்பதை இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளுக்கு ஆணித்தரமாக எடுத்துக்கூறிய பெருமை இவரையே சாரும் என்றார்.

இந்நிகழ்வில் முன்னாள் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவமகாராசா உட்பட கூட்டணிப் பிரமுகர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(உ-04)

## நல்லூரில் திருவருள் பொழிகிறான்

தீர்த்தமாடி நல்லூரில் திருவருள் பொழிகிறான்
தேடுவோர் பாவம் தீர்த்து திருவருள் பொழிகிறான்
முகூர்த்தம் நெருங்கும் வேளை பார்த்து நல்லூரில்
முகுந்தன் மருகன் தீர்த்தமாடி திருவருள் பொழிகிறான்
ஆர்த்த பிறவித்துயர் போக்க நல்லூரில்
ஆறுமுகவன் தீர்த்தமாடி திருவருள் பொழிகிறான்
நேர்த்தியெல்லாம் நிறைவேற்றி நல்லூரில்
நினைத்த யாவும் தர தீர்த்தமாடி திருவருள் பொழிகிறான்

கவிமாமணி - மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

## வந்தாளா திருத்தல் வழக்காமோ

கந்தாவுனை நாளும்நல் நாமங்கள் கற்று
எந்தாய்யென ஏத்தல்தவி ரேன்இன்றுனை தீர்த்தம்
தந்தாள்யெனை சங்கரன் மைந்தாமண நல்லூர்
வந்தாளா திருத்தல் வழக்காமோ சொல்லாய்

சிவ.சண்முகவடிவேல்

# உடத்தலவின்ன வழக்கு

# விசாரணை மீண்டும் ஆரம்பம்

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் உடத்தலவின்னப் படுகொலைகள் வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆரம்பமாகியது.

இந்தப் படுகொலைகளுக்காகப் பாவிக்கப்பட்ட பொருட்கள் அரச பகுப்பாய்வாளரிடம இருப்பதாகவும அவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க நீதிமன்றம் அனுமதிக்க வேண்டுமெனவும் அரசதரப்பில் ஆஜராகியிருந்த பிரதி சொலிசிற்றர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ நீதிபதிகளிடம் கேட்டுக்கெண்டதையடுத்து, நீதிபதிகள் அதனை ஏற்றுக்கொண்டனர்.

இவ் விசாரணையின் போது மொகமட் நவ்ஷாத் என்பவர் சாட்சியமளித்தார். அவர் தனது சாட்சியத்தின் போது கூறியதாவது ,பைசலின் சடலத்தை அடையாளம் காட்டியபோது அவ்விடத்தில் அப்துல் முனாப் முகமட்முகைதீன் என்பவரின் சடலமும காணப்பட்டது என்றார்.

பைசலின் சடலத்தை தான் கண்டி பொலிஸ் நிலைய பிரேத அறையில அடையாளம் காட்டியதாகவும் சாட்சி மேலும் தெரிவித்தார். (இ)

## சாந்தி நிலைக்க தீர்த்தமாடுவான்

தீர்த்தங்கள் ஆடிவரும் தில்லை நடராசன்
தீராதவினை தீர தீர்த்தங்கள் தான் இடுவான்
ஏராளமான பக்தர் எல்லையிலா இன்பங்கொள
எழில்மிகு தோற்றத்துடன் தீர்த்தம் ஆடிடுவான்
நல்லையம்பதி தனிலே நலமுற வீற்றிருக்கும்
நல்லை நகர்கந்தன் இங்கு நல்லருள் தீர்த்தம் ஆடுவான்

துர்க்கா கவிஞானி

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பகிஷ்கரிப்புக்கு

## இலங்கை ஆசிரியர் சங்கம் ஆதரவு


வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும்வரை வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேற்படி சங்கம் விடுத்துள்ள அறிக்கையில்,

அவர்களில் பலர் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் தேசிய ஆங்கில டிப்ளோமா பட்டம். பெற்றும் உரிய தகைமைகளைப் பெற்றிருந்தும் கூட, கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக 80 ரூபா சம்பளத்தை நாளொன்றுக்குப் பெற்று, ஆசிரியர்கள செய்யும் வேலைகளை செய்து வேலைப்பளுவை அவர்களும் சுமந்து கொண்டிருப்பது மிகப்பெரும் குறைபாடாகும்.

நாட்டில் நிலவுகின்ற ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு, உடனடியாகப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களில் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் தேசிய ஆங்கில டிப்ளோமாப் பட்டம் பெற்றோர் (க.பொ.த) உயர்தரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தி பெற்றோர் க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் விசேட சித்தி, திறமைச் சித்தி பெற்றோர் ஆங்கில இலக்கிய பாடத்தில் சித்தி பெற்றோர் போன்றவர்களை நிரந்தரமாக்கு மாறு கோரி, கல்வி அமைச்சுக்கு எமது பலத்த அழுத்தத்தைத் தெரிவித்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் போராட்டத்திற்கு எமது ஆதரவையும், அவர்களது போராட்டம் வெல்ல எமது ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின் றோம் என்றுள்ளது.

(உ)



**தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற அமரர் அமிர்தலிங்கத்தின் 76வது பிறந்ததினநிகழ்வில் அவரது திருவுருவப் படத்திற்கு சிவாஜிலிங்கம் எம்.பி.மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.** படம்:க.பவன்

## பரிவோடு வந்துன் அருள்தாராய்

திக்கற் றலைந்து திசைமாறி
தெருவில் உழன்று மிகவாடும்
மக்கள் திரும்பித் தமதில்லம்
மகிழ்வோடு செல்ல வழிகோலி
பக்கத் துகந்த துணையாகிப்
பரிவோடு வந்து னருள்தாராய்,
செக்கச் சிவந்த சிவபாலா
திகழ்கின்ற நல்லைப் பெருமாளே!

வ.சின்னப்பா, தனங்கிளப்பு

## கந்த மலர் சோலை முருகா

தந்தையார் கட்டளையால் தமிழ்முருகா நீ
தாரகனைக் கிரவுஞ்சத் து டனேயழித்தாய்
அந்த வீரன் வீரவாகு மயலை வீட்டியே
ஆதிசத்தி வேலுடனே வாகை சூடினாய்
கந்தமலர்ச் சோலை சூழ்ந்த நல்லைப் பதியிலே
கந்தா குமரா வென்று அடியர் போற்றிடவே
சிந்தை மகிழ் சிவன் மைந்தா செந்தமிழ் நாட்டை யுன்
சேவடியா வளந்தெமக்குச் சேர்த்து வையையா

முதுபெரும்புலவர், வை.க.சிற்றம்பலம்

# இடதுசாரி அரசொன்றை அமைக்க

# கொலம்பியாவிலுள்ள இரு போராளிக்குழுக்களும் இராணுவ ரீதியாக இணையத் தீர்மானம்

(போகோடா)

**கொலம்பியாவில் இடதுசாரி அரசாங்கமொன்றை அமைக்கும் நோக்கத்துடன் அந்நாட்டின் அமெரிக்க ஆதரவு அரசாங்கத் திற்கு எதிராகப் போராடிவரும் இரண்டு போராளி அமைப்புக்க ளும் தாம் இராணுவ ரீதியாக இணைந்து செயற்படப்போவதாக அறிவித்துள்ளன.**

நீண்ட காலமாக இத்தகைய போராட்டமொன்றை நடத்திவரும் ப.்.க் எனப்படும் அமைப்பும் ஈ.எல்.எம்.் எனப்படும் அமைப்புமே இவ்வாறு அறிவித்துள்ளன.

கொலம்பிய ஜனாதிபதி அல்வாரா ஜீரெப்பிற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை கூட்டாக மேற்கொள்வதற்கும் இந்த இரண்டு அமைப்புக்களின் தலைவர்களும் உடன்பட்டுள்ளனர்.

பல சுற்றுக்களாக இடம்பெற்ற இரகசியப் பேச்சுவார்த்தைகளை அடுத்து எடுக்கப்பட்டுள்ள இம்முடிவு அந்த நாட்டின் நாலு தசாப்த காலமாக நிலவிவந்த முரண்பாடுகள் புதிய பரிணாமம் பெறப்போவதை எடுத்துக் காட்டுவதாகவும் ரொய்ட்டர் தெரிவிக்கின்றது.

சுமார் 17 ஆயிரம் போராளிகளைக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் சோவியத் ஆதரவு ப.்.க் அமைப்பு லத்தீன் அமெரிக்காவிலேயே மிகவும் பழமை வாய்ந்த போராட்ட அமைப்பாகக் கருதப்படுகின்றது.

முன்னர் ஒரு ஸ்பானிய கத்தோலிக்க மதகுருவினால் தலைமை தாங்கப்பட்ட ஈ.எல்.எம். அமைப்பு தொடர்ச்சியான இராணுவத் தாக்குதல்களுக்கு முகம் கொடுத்தமையினால் பெரும் பல வீனமடைந்த போதிலும், தொடர்ந் தும் அரசை எதிர்த்துப்போராடி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இரண்டு அமைப்புக்களுடனும் முன்னாள் ஜனாதிபதி அன்ரஸ் கஸ்ரானா பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தபோதிலும் அவை எதிர்பார்த்த பலன்கள் எதனையும் கொடுக்கவில்லை.

இதேவேளை, போர் நிறுத்தம் ஒன்றை இந்த அமைப்புக்கள் அறிவிக்கும் பட்சத்தில் அவற்றுடன் பேச்சுக்களை நடத்த தயாரென தற்போதுள்ள ஜனாதிபதி விடுத்துள்ள அறிவிப்பையும் ஏற்க இவ்விரு அமைப்புக்களும் மறுப்புத் தெரிவித்துள்ளன. (பி-2)

# ஆப்கானிலுள்ள கைதிகளின் விடுதலைக்கு யு.எஸ். உதவியை நாடுகிறது பாகிஸ்தான்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 600 பாகிஸ்தானியக் கைதிகளை விடுதலை செய்வதற்கான அனுமதியை அமெரிக்கா ஆப்கானிஸ்தான் அரசுக்கு வழங்க வேண்டும் என்று பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக தாம் ஆப்கானிஸ்தான் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகப் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் கூறியிருக்கிறார்.

அமெரிக்காவுக்கு எதிரான யுத்தத்தின்போது தலிபான் படையினருடன் கூட்டுச் சேர்ந்து போரிட்ட சுமார் 640 பாகிஸ்தானியர்கள் அமெரிக்கப் படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் இவர்களை விடுதலை செய்ய ஆப்கானிஸ்தான் அரசு சம்மதித்த போதிலும் அமெரிக்க அதிகாரிகள் இதற்கான அனுமதியை இதுவரை வழங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (பி-9)

# புதிய அரசு அமைக்கக் கோரி நேபாள அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளன

(காட்மண்டு)

நேபாளத்தில் புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண் டும் என அந்த நாட்டின் அரசியல் கட்சிகள் மன்னர் கஜேந்திராவுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

தற்போது பதவியில் இருக்கின்ற பிரதமரைப் பதவி நீக்கிவிட்டு புதிய அரசாங்கமொன்றை அமைக்க வேண்டுமெனக் கோரியே இந்த அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

பிரதான ஐந்து அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து நேபாளத்தின் தலைநகரான காட்மண்டுவில் எதிர்வரும் மாதம் 4ஆம் திகதி விசேட ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பல கட்சிகளையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானவர்கள் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேபாளத்தில் புதிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் வரை தொடர்ந்து இப்போராட்டம் நடத்தப்படும் என பிரதான கட்சிகள் ஐந்து தெரிவித்துள்ளன. (பி-2)

# ஈராக்கில் படைகளை அதிகரிப்பதால் தாக்குதல்களை நிறுத்த முடியாது போல் பிறிமர் கருத்து

(வாஷிங்டன்)

ஈராக்கில் தற்போது நிலை கொண்டிருக்கும் அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதால் மட்டும் தற்போது அங்கு இடம்பெற்றுவரும் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த முடியாதென ஈராக்கில் தற்போதுள்ள நிர்வாகத்தின் தலைவர் போல் பிறிமர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிற்குள் தற்போது மிக அதிகளவிலான இஸ்லாமியத் தீவிரவாதிகள் ஊடுருவி உள்ளதாகத் தெரிவித்துள்ள அவர்,

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தாக்குதல்கள் மேலும் அதிகரிக்கலாம் எனவும் அச்சம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 19ஆம் திகதி ஈராக்கிலுள்ள ஐ.நா. அலுவலகத்தின்மீது இடம்பெற்ற தற்கொலைக்குண்டுத் தாக்குதலை அடுத்து அங்கு பாதுகாப்பு அதிகரிக்கப்படவேண்டுமென ஐ.நா. பொதுச்செயலாளர் கோபி அனான் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

# ஈராக்கில் உளவு பார்ப்பதற்கு அமெரிக்கப் படைகளுக்கு உதவ ஈராக்கியர்களும் ஈடுபடுத்தப்படுவர்

(வாஷிங்டன்)

அமெரிக்கப் படைகளுக்கு உதவும் முகமாக ஈராக்கியர்களை உளவு சேவையில் ஈடுபடுத்துவதற்கு அமெரிக்க அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

அண்மைக்காலங்களாக ஈராக்கில் இடம்பெற்றுவரும் தாக்குதல்களை தடுக்கும் முகமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனின் காலப்பகுதியில் உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு அமெரிக்காவுக்கு உதவிய நபர்கள் சிலரும் இந்தப் பணிக்காகச் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். (பி-9)

# தென்கொரிய ரக்வண்டி சாரதிகள் 30 ஆயிரம் பேர் வேலை நிறுத்தம்

(சியோல்)

தென்கொரியாவில் 30 ஆயி ரம் ரக் வண்டிச் சாரதிகள் 5வது நாளாகவும் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் தென்கொரியத் துறைமுக ஏற்றுமதி இறக்குமதிப் பணிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

அதிகரித்த சம்பளம் வழங்க வேண்டுமெனக் கோரியே இந்தச் சாரதிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் இவர்களது இந்த வேலைநிறுத்தப்போராட்டம் சட்ட விரோதமானதொன்றென தென்கொரிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தென்கொரிய அரசாங்கம் இவ்வாறு கூறியுள்ள போதும் கடந்த வெள்ளிக்கிழமை இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர்.

இப்பேச்சுவார்த்தைகளின் போது ரக்வண்டிச் சாரதிகள் மேலதிக கலந்துரையாடல்களை இது தொடர்பாக நடத்தவேண்டுமெனக் கோரியதையடுத்து பேச்சுவார்த்தைகள் கைவிடப்பட்டன. (பி-2)

# 10ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்துக் கோவிலுக்குரிய ஆதாரங்கள்

## பாபர் மசூதி இருந்த இடத்தில் கிடைத்துள்ளன

(புதுடில்லி)

அயோத்தியில் 10ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்துக் கோவிலுக்குரிய மிகப் பெரிய கட்டடம் ஒன்று அங்கு இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக இந்த வழக்கு விசாரணைகளைக் கையாண்டு வரும் வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

அயோத்தியில் இந்திய தொல்பொருள் ஆய்வுக்கழகம் கடந்த 5 மாதங்களாக நடத்திய அகழ்வாராய்ச்சிப் பணியின் அறிக்கையை நேற்று முன்தினம் அலகாபாத் உயர்நீதிமன்றக் குழுவிடம் சமர்ப்பித்திருந்தது.

இதனையடுத்து அந்த அறிக்கையை ஆய்வு செய்த நீதிபதிகள் அறிக்கையை மேற்கோள் காட்டி,

10ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்துக் கோவிலுக்குரிய மிகப் பெரிய கட்டடம் ஒன்று அயோத்தியில் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்று தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்த அறிக்கை குறிப்பிட்ட சில விடயங்களுடன் ஒப்பிடும்போது ஒன்றுடன் ஒன்று முரண்பட்டதாகக் காணப்படுவதுடன் தெளிவின்றிக் காணப்படுவதாக அயோத்திப் பிரச்சினை குறித்து வழக்குத் தொடுத்த குழுக்கள் ஒன்றின் வழக்கறிஞர் ரெகோடியாமிலானி அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த வழக்குத் தொடர்பான மறுப்புக் கருத்துக்களை வெளியிடுவதற்கு அலகாபாத் உயர் நீதிமன்ற லக்னோ குழு 6 மாத கால அவகாசம் வழங்கியுள்ளது.

பாபர் மசூதி அயோத்தியில் அமைக்கப்படுவதற்கு முன்னர் இந்துக் கோயில் இருந்ததா இல்லையா என்பது குறித்து நீதிமன்றம் விரைவில் தீர்ப்பு வழங்க வேண்டுமென ஆர்.எஸ்.எஸ். அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், வரலாற்று மற்றும் கலை ஆதாரங்களையும் தொல்லியல் ஆய்வு மையம் உறுதிப்படுத்தியுள்ளதெனவும் இந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ராம் மாதவ் கூறியுள்ளார்.

முக்கியமாக இந்துக் கோயிலைக் கட்டும் பணிக்காக முஸ்லிம்கள் வளாகத்தை ஒப்படைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (பி-2)

# புரூண்டியில் அரசு-தீவிரவாதிகள் பேச்சுவார்த்தையில் திருப்தி

(பிரிடோரியா)

அதிகாரப்பகிர்வு தொடர்பாக புரூண்டி ஜனாதிபதிக்கும், அந்நாட்டு பிரதான தீவிரவாத இயக்கத் தலைவருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக முடிவடைந்துள்ளதாக மேற்படி பேச்சுவார்த்தையை முன்னின்று நடத்திய தென்னாபிரிக்கா தெரிவித்துள்ளது.

இப்பேச்சுவார்த்தைகள் நேற்று முன்தினம் முடிவடைந்ததையடுத்து தென்னாபிரிக்கா இது விடயம் குறித்த அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் புரூண்டி அரசாங்கத்தின் பகுதிகளிலும், தேசிய சபையிலும் பாதுகாப்புத் துறையிலும், ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் படைகள் என்ற தீவிரவாதக் குழு உறுப்பினர்கள் பங்குபற்றுவதற்கு அனுமதி வழங்கப்படுவது குறித்து பேச்சுவார்த்தைகளின்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க உதவி ஜனாதிபதி ஜேக்கப் ஷீமா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புரூண்டி ஜனாதிபதி டோமிஷியன் டேஜிஷியோ, ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் படைகளின் தலைவர் பியரே குஷ்ஷியா ஆகியோர் கலந்து கொண்டனர். இரு தரப்பினராலும் பேச்சுவார்த்தையின்போது முன்வைக்கப்பட்ட விடயங்கள் முழுமையாகவும் மிகத் தெளிவாகவும் ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

# ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிராக யு.எஸ். இராணுவம் நடவடிக்கை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தினர் நேற்று தலிபான் தீவிரவாதிகள் மீது பாரிய இராணுவ நடவடிக்கையொன்றை ஆரம்பித்தனர்.

தரைமார்க்கமாகவும் போர் விமானங்கள் மூலமும் இந்த நடவடிக்கையை அமெரிக்கப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளின் போது 20க்கும் மேற்பட்ட தலிபான் தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டும் 600க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் ஷாபுல் மாநிலத்தின் கிராமப் பகுதியில் இந்த நடவடிக்கை இடம்பெற்றதாகவும் இதன்போது 450 ஆப்கான் படையினரும் ஈடுபட்டிருந்ததாகவும் மேலும் கூறப்படுகின்றது. (பி-2)

# இராணுவம் அனுப்ப பெல்ஜியமும் மறுப்பு

(ப்ரூஸ்ஸெல்ஸ்)

ஈராக்கிற்கு அமைதி காக்கும் படைக்கு இராணுவத்தை அனுப்ப பெல்ஜியம் மறுத்துள்ளது. தேவைப்படும் பட்சத்தில் அந்த நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி உதவிகளை வழங்க தயாராகவிருப்பதாக பெல்ஜியம் அறிவித்துள்ளது.

ஈராக்கில் அமைதி காக்கும் படைக்கு மேலும் இராணுவத்தினை அனுப்பிவைக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் டபிள்யு புஷ் உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனையடுத்தே பெல்ஜியம் ஈராக்கிற்குப் படைகளை அனுப்பும் விடயத்தில் தனது நிலைப்பாடு என்னவென்பதை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, ரஷ்யா, இந்தியா என்பனவும் அமெரிக்காவின் இந்த வேண்டுகோளிற்கு ஏற்கனவே மறுப்புத் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல : 29

### கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:

01. க. அகிலன்- வரணி மகாவித்தியாலயம்
02. ப. கௌதமன்- உரும்பிராய் அ.மி. கல்லூரி
03. யோ. பிரிந்தா- வரணி மகாவித்தியாலயம்
04. இ. இராஜப் பிரசாந்தன்- மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை
05. ம. சிவறோஷன்- வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி
06. ப. சஞ்சிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
07. தி. அருந்தசா- கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி
08. க. சுஜித்தா- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
09. ஸ்ரீ. சரத்பவன்- கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
10. செ. கலிஸ்ரா- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க பாடசாலை
11. ம. இந்துஷா- மல்லாகம் கனிஷ்ட மகாவித்தியாலயம்
12. கே. சோபனா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
13. கு. விஜிதா- வல்வை றோ.க.த.க. பாடசாலை
14. ர. வதுஷணன்- யா/மத்திய கல்லூரி
15. ர. யதுர்சன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
16. செ. திருக்குமரன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
17. ந. கீர்த்திகா- யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
18. ச. சுவீபன்- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
19. கு. கோபிராம்- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
20. இ. பிரியங்கா- துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
21. சி. துளசிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
22. மு. நிரோஜா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
23. வே. சரண்ணியா- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
24. த. சரண்யா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
25. ச. சுவஸ்திகா- கோப்பாய் சீ.சீ.த.க.பாடசாலை
26. ஐ. விஜயன்- ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
27. கி. பிரசன்னா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
28. இ. மதனிகா- வல்வை விநாயகர் வித்தியாலயம்
29. வி. பிறேமிலா- தேவரையாளி இந்துக் கல்லூரி
30 செ. நிஷாந்- இணுவில் மத்திய கல்லூரி
31. க. தனுசீலன்- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
32. ச. நந்துஜா- யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்
33. சி. துவாரகன்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
34. நா. கீர்த்திகா- சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
35. கி. நிசான்- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
36. ம. ஜனனி- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
37. க. கரிசினி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
38. அ. ராஜ்ஹரன்- கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி
39. ச. சோபிகா- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
40. சி. ஜோதிகா- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
41 கு. சிரஞ்ஜீவன்- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
42. ப. தர்மிளா- சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம்
43. த. யதுர்ஷன்- யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்
44. க. சிந்துஜன்- துன்னாலை மெ.மி.த.க பாடசாலை
45. தா. தேவப்பிரியன்-யா/ புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்
46. ச. ஜயகணேஸ்-கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
47. பா. சிவனருட்செல்வசர்மா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
48. சா. மதுரமி- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
49. ஜெ. கோகுலராஜ் -கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
50. க. கனிஜோன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
51. ர. சாம்பவி- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
52. பி. யோபிதா- வல்வை சிவகுரு வித்தியாசாலை
53. ஸ்ரீ. நீரஜா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
54. பி. நிரோஷன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
55. தி. ஜெனத்குமரன்- கோப்பாய் றோ.க.த.க.பாடசாலை
56. த. பத்மலோஜனி- மீசாலை மகாவித்தியாலயம்
57. ஜா. நரேந்திரன்- ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
58. இ. சிந்துயா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
59. க. கோபிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
60. இ. கிரிசாந் யா/ மத்திய கல்லூரி
61. கோ. பிரதீபா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
62. செ. திலக்ஷன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
63. யோ. துக்ஷாஜினி யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
64. சி. மதுசன்- வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
65. மோ. சோதீபன்-மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை
66. பா. தனுஜன்- கோப்பாய் மகாவித்தியாலயம்
67. சோ. தனஞ்சயன்- தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை
68. பி நந்தினி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
69. தெ. லவன்ஜா- வல்வை சிவகுரு வித்தியாசாலை
70. பா. சந்திரா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
71. ச. ஜெயபாரதி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
72. க. வாணுஜா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
73. சு. கிருஷாந்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
74. செ. ஆருணன்- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
75. ம. திபிஜா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
76. த. பிரியங்கா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
77. இ. சௌமியா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
78. இ. கோபிகிருஷ்ணன்- வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி
79. கி நிதர்சன்- வரணி மகாவித்தியாலயம்
80. பு. லதுஷா- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
81. ஆ. சஜீபன்- கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயம்
82. நா. திருவதனன்- உடுவில் மகளிர் கல்லூரி
83. ஞா. தாரணி- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
84. ப. சாகித்தியன்- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
85. சி. அபிராமி- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
86. த. விக்னராஜ் வல்வை றோ.க.த.க. பாடசாலை
87. ந. நிவாஷன்- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
88. இ. கோபிகன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
89. ச. சுகிர்தா- கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலயம்
90. ந. நக்கீரன்- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
91. பா. யதுநந்தன்- மயிலணி சைவ மகாவித்தியாலயம்
92. ச. ஷண்மதுரன்- சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலை
93. ச. அகலியா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
94. ஸ்ரீ கஸ்தூரி- அச்சுவேலி மத்திய கல்லூரி
95. கீ. அச்சுதன்- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
96. வி. துஷ்யந்தன்- நயினைநாகபூசணி வித்தியாலயம்
97. த. பிரியந்தி- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
98. வ. சுஜீவன்- கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
99. ப. சுதன்- உடுவில் மகளிர் கல்லூரி
100. வி. நிறோஜன்- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
101. ஆ. பிரதீபன்- கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்
102. செ. ஞானகௌரி- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
103. ர. வினோஜினி- கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
104. வே. நிதூஷன்- யா/மத்திய கல்லூரி
105. ஜி. அபர்ணா- கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
106. ச. திவிஜன்- உடுவில் மகளிர் கல்லூரி
107. கு. கௌதமன்- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
108. சி. கோபிகா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
109. அ. விமலினி- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
110. பு. கிருசா- நவாலி மகாவித்தியாலயம்
111. க. செல்வி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
112. அ. சுகந்தன்- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
113. சி. சஸ்மிதா- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
114. வி. கஜகோபிதன்- உருத்திரபுரம் மகாவித்தியாலயம்
115. ப. குகதர்சினி- அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
116. பூ. திலக்ஷி- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
117. நா. சிவனியா- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
118. பு. பபிகரன்- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
119. அ. தவக்குமார்- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
120. இ. கஜன்ராஜ்- பூம்புகார் அ.த.க.பாடசாலை
121. இ. பவீசன்- உடுவில் மகளிர் கல்லூரி
122. நே. லாவண்யன்- தாவடி இ.த.க.பாடசாலை
123. யோ. ஜென்சியா- சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம்
124. ஆ. நிரோஜினி- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க பாடசாலை
125. து. வைஷ்ணவி- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
126. சி. காயத்திரி- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
127. பே. சைலோ- யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
128. செ. சர்வகா- கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்
129. த. துஷாந் யா/ மத்திய கல்லூரி
130. ச. லக்ஷிகா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
131. மு. பிருந்தா- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
132. லி. கரூஷன்- இணுவில் மத்திய கல்லூரி
133. சி. ஜஜிதா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
134. தெ. வினோஜ்காந்- யா/ மத்திய கல்லூரி
135. த. சிவதாஸ்- கரவெட்டி இராமுப்பிள்ளை வித்தியாலயம்
136. யோ. கௌசல்லியா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
137. க. சுகந்தினி- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
138. கு. பிரசாந்- யா/ மத்திய கல்லூரி
139. ம. கலைமதி- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
140. இ. ஸ்ராலினி- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
141. ர. மயூரி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
142. ச. தனேஷன்- திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை
143. ம. கஜீபா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
144. க. கலீபன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
145. ப. சங்கீர்த்தனா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
146. யோ. சரண்யா- சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம்
147. சி. பிருந்தினி- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
148. செ. அருள்ராஜ்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
149. த. விஜிதன்- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
150. தி. உமாசங்கரி- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
151. செ. சிவதர்சினி- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
152. சி. தயனி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
153. க. சாமளா- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
154. சி. கௌசிகா- கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
155. கு. கிதுர்சன் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
156. க. லக்ஷியா- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
157. செ. சாருகா- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
158. க. விபிஜா- ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலை
159. சி. சரணிகா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
160. உ. கோபிகா- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
161. நா. தேனுயா- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
162. சி. சஞ்சீவன்- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
163. ச. அனுசா- சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலை
164. ஞா. பிருந்தாவனன்- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
165. சி. சுகனியா- மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை
166. கி. காவேரி- யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
167. யோ. வசந்தன்- உவர்மலை விவேகானந்தா கல்லூரி
168. இ. ரேணுகா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
169. ம. காவிஜா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
170. அ. சுகிர்தன்- யா/ மத்திய கல்லூரி
171. சி. கேமாவதி- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
172. சீ. சுஜீபனா- அச்சுவேலி மத்திய கல்லூரி
173. சு. ரிசாந்தினி- சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம்
174. நி. ஜெயேந்திரன்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
175. இ. சந்திரஜெயம்- மீசாலை கிழக்கு
176. சு. திலக்சன்- யா/ மத்திய கல்லூரி
177. இ. நிவேதா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
178. க. நிதர்சன்- யா/ மத்திய கல்லூரி
179. மோ. சித்திராங்கன்- தந்தை செல்வா தொ.நி.பள்ளி
180. க. சிவருக்ஸி- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
181. ச. சஞ்சீவன்- இணுவில் மத்திய கல்லூரி
182. ஸ்ரீ. பவீந்திரன்- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
183. யோ. ஆரணி- தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி
184. த. தபேஜனன்- இணுவில் மத்திய கல்லூரி
185. ச. லிகிர்தா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
186. ச. கவினயா- யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
187. வி. அமலா- நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாசாலை

## சட்டவல்லுநர் குழுவுக்கு

# முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி தலைமை

(பாரிஸ்)

இடைக்கால நிர்வாக சபைத்திட்ட வரைபு குறித்து பாரிஸ் நகரில் இடம் பெற்று வரும் சட்டவல்லு நர்களுடனான கலந்துரையாடலில் சட்டவல்லுநர்கள் குழுவிற்கு முன் னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி தலைமை தாங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கலந்துரையாடலில் திட்ட வரைபிலுள்ள கட்டுமானத் திட்டப் பணிகளுக்கு விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மட்டு-அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் தூய வனும் சட்டத்துறை பணிகளுக்கு சிவா பசுபதியும் தலைமைதாங்கியுள் ளனர்.

பாரிஸில் நடைபெறும் இக்கலந் துரையாடலில் பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படு வதாகவும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலுமுள்ள விடுதலைப்புலிப பிரமுகர்களும் ஆதரவாளர்களும் பாரிஸில் வந்து தங்கியுள்ளதால், பாரிஸ்நகர் முழுவதும் பலத்தபாது காப்பு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

அதேநேரம், மட்டு-அம்பாறை மாவட்டத்தளபதி கேணல் கருணா இதுபற்றிக் கருத்துத்தெரிவிக்கையில்,

அரசினால்,வழங்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபைத் திட்ட வரைபில் ,திருந்தம் செய்யப்படும் போது மாற்று யோசனையை அர சாங்கம் ஏற்காத பட்சத்தில் போராடு வதைத் தவிர வேறு தீர்க்கமான வழி ஏதுமில்லை எனச் சுட்டிக் காட்டி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-18)

## வினாத்தாள் 29-ன் விடைகள்

01 (அ) 02. (ஆ) 03. (ஆ)
04. (அ) 05. (அ) 06. (3)
07. (2) 08. (2) 09. (3)
10. (3) 11. (1) 12. W
13. W 14. S 15. R
16. சமனல்ல
17. சமனல்ல
18. குறைவு
19. அதிகமானது
20. சமன்
21. (3) 22. (3) 23. (1)
24. 14, 45
25. 10 26. 3 27. D, நீலம்
28. C, F
29. ஆம், 2ஆம் இடம்
30. C-92 cm, F-88cm
31. F<C<B<A<E<D
32. 1.06, 0.106
33. 3 34. 4 35. 2
36. 1 37. 4 38. 4
39. 1 40. 4

## நல்லையில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற் சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் தூர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றுவரும் தெய்வீக இசை அரங்கில் 25ஆம் திருவிழவான இன்று என்.வி.எம்.நவரத்தினம். என் பரந்தாமன் ஆகியோரின் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

★ ★ ★

நல்லைக் கந்தன் உற்சவத்தை யொட்டி யாழ்.மாவட்ட வடபிரதேச இந்துப்பேரவை ஏற்பாட்டில் ஆலயத் தேரடியில் அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத் தில் இடம்பெற்றுவரும், தெய்வீக இசைத்தொடரில் இன்று மாலை 6.00மணிக்கு நல்லைச் சகோதரி கள் கஜந்தினி குலநாயகம், சிவா ஜினி கணேசலிங்கம் ஆகியோரின் ''நல்லூர் உற்சவகால பல்லவி'' இடம்பெறும்.

★ ★ ★

நல்லூர் கந்தன் வருடாந்த உற்ச சவத்தையொட்டி நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்துவிநாயகர் மண்டப அரங்கில் பிரம்ஸ்ரீ சிவ.வை.நித்தி யானந்த சர்மா நிகழ்த்திவரும் ''திரு விளையாடற் புராணம்'' தொடரில் இன்று ''வலைவீசிய கலை'' என்ற விடயம் பற்றி இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

★ ★ ★

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் நடாத்தும் நல்லூர் கந்த சுவாமிகோவில் தீர்த்த இசைநிகழ்ச் சிகள் இன்று காலை 9.00மணி முதல் பி.ப.1.45வரை ஆதீன கலா மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் சந்திரிகா கணேஸ்வர னின் திருமுறைக் கச்சேரியும் றொபேட் தவநாதன், கிருபானந்தி பேரின்ப நாயகம், ஜனனி நல்லை நாதன் ஜே.லக்ஸ்மி ஆகியோரின் இசைக் கச்சேரியும், எஸ்.ஞான சொரூபன் எஸ்.கருனேஸ்வரன ஆகி யோரின் இசையரங்கும் கே.சிவ யோகராணியின் பண்ணிசையும் இடம் பெறவுள்ளன. (உ-18)

## திக்கரை முருகனுக்கு கோபுரம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் களபூமி திக்கரை முருகன் ஆலய கோபுரத்திருப்பணி கடந்த ஜூன் மாதம் ஆரம்பமாகி தொடர்ந்தும் இடம் பெற்றுவருகின்றது.

இத் திருப்பணிக்கு,இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஒன்றரை இலட்சம் ரூபாவை அன்பளிப்புச் செய் திருப்பதுடன், இவ்ஆலயத்தை அண் டிய திக்கரை-பொன்னாவளை வீதி, திக்கரை-மாதா கோவில் வீதி இரண டையும் புனரமைப்புச் செய்வதற்கு நிதியுதவியளிப்பதாகவும் உறுதியளித் துள்ளார். (உ)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)


சுயதொழில் உற்பத்தியாளர் களை ஊக்குவிக்கும் முகமாக யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் 2003அம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27,28,29 ஆம் திகதிகளில் நடாத் தப்படவிருக்கும் மாகாண மட்ட கைத்தொழில் கண்காட்சியில் பங்கு பற்றும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்களுக்கும், சுயதொழில் முயற்சியாளர்களுக்குமான பொதுக் கூட்டம் நாளை முற்பகல் 10.00 மணிக்கு கச்சேரி மாநாட்டு மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு கண்காட்சி யில் பங்குபற்றும் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட் டுக்கொள்ளப்பட்டுள்ளது. (உ)

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்

வினா இல. : 31 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

✦ அலுவலகம் ஒன்றில் அமர்ந்துள்ள 05 ஊழியரைப் பற்றிய விபரம் வருமாறு




✦ சுமணதாச இந்த அலுவலகத்திற்கு பொறுப்பானவர். அவர் தனியறையில் அமர்ந்துள்ளார். அவரிற்கு தொலைபேசி உண்டு.
✦ முகமட் என்பவர் வரவேற்பாளர். அவர் எப்போதும் அலுவலகத்தின் முன்பக்கத்தில் அமர்ந்திருப்பார்.
✦ கணேசன் அமைதியானவர். அவருக்கு சத்தங்கள் என்றால் பிடிக்காது. அவர் தொலைபேசி மணிச்சத்தத்தைக் கூட விரும்பமாட்டார்.
✦ அருந்ததி இந்த அலுவலகத்தின் பெண் உதவியாளர். அவரது அறை அலுவலகத்திற்கு பொறுப்பானவரின் அறைக்கு அருகே உள்ளது.
✦ சிசிலியா இங்கு பணிபுரியும் இன்னொரு பெண் ஊழியர். அவரது அறை கணேசனது அறைக்கு அடுத்ததாக உள்ளது.


இந்த தரவுகளின் பிரகாரம் கீழே உள்ள அறைகளில் இருப்பவர்களின் பெயர்களை எழுதுக?

01. அறை A --------
02. அறை B --------
03. அறை C --------
04. அறை D --------
05. அறை E --------


✦ **பின்வரும் கூற்றினை கவனமாக வாசிக்க. அக்கூற்றினால் நேரடியாக தோன்றக்கூடிய பிரச்சினை எதுவென தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அருகேயுள்ள கூட்டினுள் எழுதுக?**

06. கூற்று: வாகனத்தை மதுபோதையில் ஓட்டுதல்
    1) மக்கள் பயமின்றி வீதியால் செல்லுதல்
    2) வாகனம் ஓட்டுபவர் உற்சாகமாகவும் சந்தோசமாகவும் இருப்பதால் மகிழ்ச்சியான பயணம்
    3) நிதானம் இன்றி வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தலாம் ☐
07. கூற்று: சனத்தொகை அதிகரிப்பு
    1) வீதியில் போக்குவரத்து நெருக்கடி
    2) உணவு, நிலப்பற்றாக்குறை
    3) கலாசார சீர்கேடு, சண்டை சச்சரவு அதிகரித்தல் ☐
08. கூற்று: தொடர்ந்து அடை மழை பொழிதல்
    1) வெள்ளப்பெருக்கு, பயிரழிவு, வீடு வாசல்களை விட்டு மக்கள் வெளியேறல்
    2) கப்பலில் பயணம் மேற்கொள்ளல்
    3) நீர், நிலைகள் நிரம்புதல் ☐
09. கூற்று: ஆசிரியர் திறமையாக கல்வியை போதித்தார்
    1) மாணவர்கள் ஆசிரியரின் பாடத்தில் கவனக்குறைவாக இருந்தனர்
    2) மாணவர்கள் மிக அவதானமாக ஆசிரியரின் போதனையைக் கேட்டனர்
    3) அதிகளவு மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெற்றனர் ☐
10. கூற்று: வீதிப் போக்குவரத்துச் சட்டங்கள் அமுலுக்கு வந்துள்ளது
    1) விபத்துக்கள் பெருமளவில் குறையும்
    2) வீதியில் மக்கள் நடமாட்டம் குறையும்
    3) வீதியில் பொலிஸார் எப்போதும் நிற்பர் ☐

✦ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


11.  அருகேயுள்ள உருவில் உள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை
    1) 2 2) 3 3) 4 4) 5


12. 1 டசின் தீப்பெட்டிகள் ரூபா X எனின் 3 தீப்பெட்டிகளின் விலையை X சார்பாக எழுதின் விடை
    1) 3/12X ரூபா 2) X/12 ரூபா 3) 36 ரூபா 4) 36X ரூபா
13. 200g சீனியின் விலை ரூபா y எனில் 1Kg 200g சீனியின் விலையை y சார்பாக எடுத்துரைக்க?
    1) y ரூபா 2) 2y ரூபா 3) 5y ரூபா 4) 6y ரூபா
14. அதிகளவு சதுரமுகிகளையுடைய உரு எது?



1) 2) 3) 4)

✦ **கீழ்வரும் தொடர்பை அவதானித்து சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக**




15.  இன் பெறுமானம் யாது?
------------------------------------------------

16.  இன் பெறுமானம் யாது?
------------------------------------------------

17.  இன் பெறுமானம் யாது?
------------------------------------------------

18.  இன் பெறுமானம் யாது?

✦ **19 தொடக்கம் 20 வரையான வினாக்களில் அவற்றின் ஆரம்பத்தில் கூறப்படும் வாக்கியத்தின் சரியான கருத்தைப் புலப்படுத்தும் வாக்கியத்தைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அருகேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

19. கற்பவன் எப்போதும் தன்னை வழிப்படுத்திக் கொள்வான்
    1) கற்பவர்கள் வழியைத் தான் முதலில் கற்கிறார்கள்
    2) கற்பவர்கள் தமது கல்வியினால் தம்மை செயல்களில் ஈடுபடுத்திக் கொள்கின்றனர்
    3) கற்பவர்கள் மற்றவர்களுக்கு வழியைக் காட்டமாட்டார்கள்
20. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் அதிகளவில் சித்தியடைகின்றனர்.
    1) யாழ்ப்பாணத்தில் கல்வி கற்பது இலகு
    2) யாழ்ப்பாணம் மத்திய மகா வித்தியாலயம் மத்தியில் இருப்பதால் அதற்கு பல வசதிகளும் சலுகைகளும் வழங்கப்படுகின்றன.
    3) யாழ்ப்பாணம் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் அதிக முயற்சியுடையவர்கள்

✦ **எனது அம்மாவும், நானும் கோயிலுக்குப் போனோம். அப்போது ''அக்கா'' என்ற குரல் எங்களை அழைத்தது.**

21. அக்குரலுக்குரியது
    1) எனது தங்கை 2) எனது தம்பி 3) எனது மாமா 4) திடமாகக்கூறமுடியாது
22. அவர் அழைத்தது
    1) என்னை 2) என் அம்மாவை 3) இருவரில் ஒருவரை 4)திடமாகக் கூறமுடியாது
23. நான்
    1) ஒரு சிறுமி 2)ஆண் பிள்ளை 3) திருமணமானவன் 4) தரவு போதாது

✦ **சாயியின் நாட்குறிப்பேட்டில் முற்பக்கத்தில் காணப்பட்ட கொழும்பு மாநகர அவசரத் தொலைபேசி இலக்கங்கள் வருமாறு**

| | |
|---|---|
| Police Emergency | 071-33333 |
| தீயணைப்பு | 01-45678 |
| தேசிய வைத்தியசாலை | 071-51206 |
| விபத்துச் சேவை | 01-32567 |
| Air Port | 01-72177 |

மேலுள்ள அட்டவணையைப் பயன்படுத்தி கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

24. கொழும்பு வைத்தியசாலையில் கடமையாற்றும் தனது தாயாருடன் தொடர்புகொள்வதற்கு சுழற்றும் இலக்கம்
.................................................
25. வீதியில் நடந்த பயங்கர விபத்தைப் பற்றி தெரிவிப்பதற்கு சுழற்றும் இலக்கம்
.................................................
26. சாயி ஒருநாள் 01-45678 என்ற இலக்கத்தை மிக அவசரமாகச் சுழற்றினார். அதன் மூலம் அவர் பெற்றுக்கொண்ட சேவை யாது.
.................................................
27. London செல்லவுள்ள சித்தப்பாவுக்கு பயணச்சீட்டுப் பற்றி அறிவதற்கு சாயி சுழற்றும் இலக்கம்
.................................................
28 பக்கத்து வீட்டிலே அசம்பாவிதம் நிகழும் போது சாயி சுழற்றும் இலக்கம்
.................................................

✦ **கீழே நாம் பயன்படுத்தும் சில முறைகள் தரப்பட்டுள்ளன அவை பழைய முறைகள் எனின் 'O' எனவும் புதிய முறைகள் எனின் 'N' எனவும் அடைப்பினில் எழுதுக?**

29. கந்தன் வயலை கலப்பையால் உழுதான். (............)
30. ஆசிரியை கணனியைப் பயன்படுத்தி கல்வி போதித்தார். (............)
31. மக்கள் பெருமளவில் போக்குவரத்துக்கு தமது சொந்தக் கார்களையே பயன்படுத்துகின்றனர். (............)
32. ராஜா பலமாடிகள் கொண்ட கட்டடத்தில் 3ஆம் மாடியில் குடியிருக்கிறார் (............)
33. அந்த மனிதன் இலை, குழைகளால் ஆடை அணிந்திருந்தான்(............)

✦ **திருவாளர் ஆறுமுகமும் அவரது மனைவி அன்னம்மா ஆறுமுகம் ஒரு விடுமுறை நாளில் செய்த முக்கியமான சில செயற்பாடுகள் உமக்குத் தரப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் கீழ்வரும் வினாக்களுக்கான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

**01.05.03 திங்கட்கிழமை**

| | |
|---|---|
| காலை 6.00 | இருவரும் நித்திரை விட்டு எழுந்தனர். ஆறுமுகம் வீட்டின் உட்புறம், வெளிப்புறம் கூட்டிக் குப்பை அள்ளி எரித்தார். திருமதி ஆறுமுகம் தேநீர் பரிமாறினார். |
| 7.30 | ஆறுமுகம் சந்தைக்குச் சென்றார். சந்தையில் கத்தரிக்காய் பயிற்றங்காய், உருளைக்கிழங்கு, கீரை, மாம்பழம், பப்பாசிப்பழம் ஆகியன வாங்கி வந்தார். சந்தையில் சரியாக 30 நிமிடங்கள் செலவிட்டார். |
| 8.10 | திரு.திருமதி ஆறுமுகம் காலை உணவை உட்கொண்டனர். காலை உணவாக அரிசிமா இடியப்பமும் உருளைக்கிழங்குக் கறியும், பால் சொதியும் திருமதி ஆறுமுகம் செய்திருந்தார் |
| 8.30 | ஆறுமுகம் தன்னுடைய பதவி உயர்வுப் பரீட்சைக்காகப் படித்தார் அவருடைய மனைவி இருவருடையஆடைகளையும் துவைத்தார். |
| 10.00 | திருமதி ஆறுமுகம் மதிய உணவு சமைத்தார்.மதிய உணவாக புழுங்கலரிசிச் சோறு, கோழி இறைச்சி, கத்தரிக்காய்க் கறி, இரசம் என்பவற்றோடு பப்பாசிப்பழமும் வைக்கப்பட்டது |
| 12.30 | இருவரும் மதிய உணவை உட்கொண்டனர். |
| 4.00 | ஆறுமுகம் தனது நண்பனின் மகளின் பிறந்ததின வைபவத்திற்கு தனது மனைவியுடன் சென்றார். |

34. 01.05.03 என்பதிலுள்ள 03 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் நீர் விளங்கிக் கொள்வது யாது.
.................................................
35. 01.05. ஒரு பொது விடுமுறை நாளாகும். இதனை ஆங்கிலத்தில் எழுதுக.
.................................................
36. சந்தையில் வாங்கிய பொருட்களில் மாச்சத்து நிரம்பிய பொருள் எது?
.................................................
37. வெல்லம் நிறைந்த உணவுப்பொருள் எது?
.................................................
38. படர்ந்து வளரும் மரக்கறி எது?
.................................................
39. இரசம் ஏன் சாப்பாட்டின் பின் குடிக்கப்படுகின்றது?
.................................................
40. புரதச்சத்து நிறைந்த உணவு எது?
.................................................

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள்—31

மாணவர் முழுப்பெயர்: .............................................
பாடசாலையின் பெயர்:.............................................
வீட்டின் முகவரி:.............................................

**மாணவர்களே! உங்கள் விடைகளை 03.09.2003இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.**

குறிப்பு:-மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத் தாள்களை வைத்துக் கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாக குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

**வலம்புரி**
**கல்விப்பகுதி,**
**15,வெள்ளாந் தெரு,**
**யாழ்ப்பாணம்.**

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

# பேராசை பெரு நஷ்டம்

பாதிக் கதையைக் கூறுவது என்பது பல நேரங்களில் கதை கூறாமல் இருப்பதைக்காட்டிலும் சிறந்தது. எனது கல்லூரி நாட்களில் சில சஸ்பென்ஸ் நிறைந்த படங்களைப் பார்த்த மாணவர்கள் அந்தப்படத்தைப் பார்க்காதவர்களிடம் முடிவை மட்டும் அதாவது இன்னார் தான் கொலையாளி என்று கூறி அந்தப் படத்தைப் பார்ப்பதற்கு இருக்கும் ஆசையையே போக்கிவிடுவார்கள்.

மைதாஸ்கதை பாதி கூறப்பட்ட கதை. தொட்டதெல்லாம் தங்கமாகத் துலங்க வேண்டும் என டயோனிஸஸ் கடவுளிடம் வரம் வாங்கிப், பின்னர் உணவும் நீரும் தங்கமாக தன்னுடைய கைத்தொடுதலால் மாற, அந்தத் தவறுக்கு வருந்தியது மட்டுமே நமக்குத் தெரியும். இதுதான் வரமே சாபமான கதை! பிறகு அவர் தம் வரத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு பயோனிஸஸ் வசம் மன்றாடியதும் அவர் நெடியாவில் உள்ள பற்றோலஸ் நதியில் குளித்து எழச் சொன்னதும், அதன் பிறகு சாபம் நீங்கியதும் புதிது.

மைதாஸை அப்பல்லோ மற்றும் பான்ஸ் தேவர்களிடையே நடந்த இசைப் போட்டிக்கு நடுவராக்கியதும் மைதாஸ் பான்ஸ் தேவன் வெற்றிபெற்றதாக அறிவித்ததும் அதனால் அப்பல்லோ சபிக்க மைதாஸினுடைய காதுகள் கழுதையின் காதுகளைப் போல மாறியதும் சுவையான சங்கதி.

மைதாஸ் தன்னுடைய காதுகள் கழுதையின் காதுகள் போல ஆனதும், மிகவும் வருத்தம் அடைந்தான். அவன் தன்னுடைய கழுதைக்காதுகளை மூடியே வைத்திருந்தான்.

அவனுடைய சிகை திருத்துபவருக்கு அந்தக் காதுகள் கழுதைக் காதுகள் தெரியும். ஆனால், அவர் அந்த ரகசியத்தை வெளியே சொல்லக்கூடாது என மைதாஸ் பயமுறுத்தினான். ஆனால், அவருக்கோ ரகசியத்தை வெளியில் கூறாமல் இருக்க முடியவில்லை. அவர் ஒரு ஆரவாரமற்ற இடத்திற்குச் சென்று குழி தோண்டி "மைதாஸுக்கு கழுதையின் காதுகள்! கழுதையின் காதுகள" என்று அந்தக் குழியினுள் கிசுகிசுத்தா. ஆனால், அங்கு வளர்ந்திருந்த உயர்ந்த களை எல்லோரிடமும் அந்த ரகசியத்தைக் கூறிவிட்டது என்று கிரேக்கப் புராணம் கூறுகின்றது.

பேராசை பெரு நட்டம் என்ற கருத்தைக் கூற உதயமானது மைதாஸினுடைய கதை. மகாபாரதத்திலும் இதுபோல் ஒரு கதை உண்டு! ஒரு மன்னவன் இருந்தான். அவன் தனக்கு ஒரு புத்திசாலிக் குழந்தை பிறக்கவேண்டும் எனவும், அந்தக் குழந்தையின் விழிகளில் இருந்தும் வாயிலிருந்தும் முத்துக்கள் உதிரவேண்டும் என்று வரம் கேட்டான்!

அப்படி ஓர் அழகிய குழந்தை பிறந்தது. அரண்மனை வாயில் சுவர் வரை எல்லா இடங்களிலும் அது, சிந்திய முத்துக் களால் அலங்கரிக்கப்பட்டன. இந்தச் செய்தி தீப்போல் பரவியது. கொள்ளைக்காரர்கள் அந்தக் குழந்தையை அபகரித்துச் சென்றார்கள்.

அரசன் குழந்தையைத் தேட ஆட்களை முடுக்கிவிட்டான். குழந்தையை இனிமேலும் மறைத்துவைக்க முடியாது. ஒருவேளை அதனை வெட்டினால் உடலில் இருந்து சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும் முத்துக்களாக மாறுமோ என எண்ணிக் குழந்தையைச் சாகடித்தார்கள் அந்தக் கொடியவர்கள்.

பற்களை முத்துக்களாக்கிச் சொற்களை அணிகளாக்கிப் பேசும் சுதந்திர மொழியினரும் நம்மில் இருக்கத்தான் செய்கின்றனர். ஆசையை விநியோகம் செய்பவர்களல்ல, ஊக்கத்தை வழங்குபவர்கள் அவர்கள்.

சரி! எதைத் தொட்டாலும் தங்கமாக வேண்டுமென்றால், மைதாஸ் தன்னைத் தானே தொட்டு ஒரு தங்கச் சிலையாகி இருக்கவேண்டுமே. தொட்டுக்கொள்ளவே இல்லையா என்ன?

இறையன்பு

## வடக்கும் கிழக்கும் ஒரு மாகாணம்

# ரணில் - பீரிஸ் கருத்துக்கு பொ.ஐ.முன்னணி கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாகவே இணைக்கப்பட்டுள்ளன. எனினும், அவை இரண்டும் ஒரு மாகாணம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் தெரிவித்துள்ள கருத்திற்கு பொ.ஐ.முன்னணி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அரசியல் சட்டத்தை மீறி விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்த அரசு முயல்வதாக பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணம் என்று ஒரு மாகாணம் இல்லை. நான் நாட்டின் பாதுகாவலனாக இருப்பேன் என சத்தியப் பிரமாணம் செய்த பிரதமர்;அரசியல் யாப்பினை மீறிச் செயற்படுவதாக பொ.ஐ.முன்னணிப் பேச்சாளர் சரத் அமுனுகம எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

மேலும் இது விடுதலைப் புலிகளின் விருப்பப்படியே நடைபெறுகிறது. பிரதமர் நாட்டு மக்களின் மூளையைச் சலவை செய்ய முயல்கிறார். 13 ஆவது சீர் திருத்தத்தின் படி, இரு மாகாணங்களும் தற்காலிகமாகவே இணைக்கப்பட்டுள்ளன. ஆனால், அவை ஒரு மாகாணமாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. இம்மாகாணங்கள் இணைக்கப்பட்டுள்ளனவா, இல்லையா என்பதை அறிய கருத்துக் கணிப்புத் தேவை.

இம் மாகாணங்களை இணைக்காதிருக்கும் முடிவை ஜனாதிபதி விரைவில் எடுக்கவேண்டும் என்றும் சரத் அமுனுகம வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

# இராணுவப் பாதுகாப்பு வழங்குமாறு ஈ.பி.டி.பி. மட்டு அமைப்பாளர் கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) அலுவலகத்துக்கும், அவ் அமைப்பின் உறுப்பினர்களுக்கும் இராணுவப் பாதுகாப்பு வழங்குமாறு அக்கட்சியின் மாவட்டப் பிரதி அமைப்பாளர் பரணீதரன் பிரதீபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவட்டப் பாதுகாப்பு இணைப்பதிகாரி கேணல் ராஜித டி.சில்வாவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இவ் வேண்டுகோளினை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து, கட்சியின் உறுபபினர்கள் இனந்தெரியாத நபர்களினால் கொலை செய்யப்பட்டமையையும், மாவட்ட அமைப்பாளர் உட்பட மூவர் கடத்தப்பட்டமையையும் அக்கடிததத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் எமது ஆயுதங்களைக் கையளித்துள்ள நிலையில் இராணுவப் பாதுகாப்பு அவசியம்.

நிராயுத பாணிகளாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் எமக்கு, ஏற்பட்டுவரும் அச்சுறுத்தல்களைப் போக்கி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி என்ற ரீதியில் எமது அரசியல் நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்கித் தரவேண்டும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய மாவட்டத்தின் ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (தி)

## வடகிழக்கில்

# கண்ணிவெடி அகற்றும் பணிக்கு சுவீடன் 114 மில்லியன் ரூபா

(கொழும்பு)

இலங்கையில் வடகிழக்குப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேற்கொள்வதற்கென சுவீடன் அரசாங்கம் 114 மில்லியன் ரூபாவினை இலங்கை அரசுக்கு வழங்கவுள்ளது.

இந்நிதி 2003 - 2004 ஆம் ஆண்டிற்கான கண்ணிவெடி அகற்றும் திட்டத்துக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் நோக்கிலேயே இக் கண்ணிவெடி அகற்றும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

சீடா நிறுவனத்தின் ஊடாக வழங்கப்படவுள்ள கண்ணிவெடி அகற்றும் திட்டத்திற்கு இந்நிதி பயன் படுத்தப்படவுள்ளதால், வடக்கு - கிழக்கில் இருந்து யுத்தத்தினால் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் பணியும் விரைவு படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## இராசி பலன்

**27. 08. 2003**

**(ஆவணி ~10, புதன்)**

**அமாவாசை- மு. இ.11.47வரை**
**மகம் - பி.இ. 06.08 வரை**
**ஆயிலியம் - மு.ப. 6.18 வரை**
**இராகுகாலம் - 12.05-01.35**
**சுபநேரம் - 04.35-06.05**
**அமாவாசை விரதம்**

**மேடம்**
காரிய இடையூறு, மனச்சஞ்சலம், வேலையில் ஆர்வம்,சகோதரர் உதவி.

**இடபம்**
புதிய விடயம், விரும்பாத உறவு, பயந்த சுபாவம், முயற்சி தாமதம்.

**மிதுனம்**
கூட்டு முயற்சி, இனிய அனுபவம், தன வரவு, செய்தொழில் நன்மை.

**கடகம்**
விதண்டாவாதம், பிரயாணம், முயற்சி தாமதம், மாதர் நட்பு.

**சிங்கம்**
நல்ல பிரயாசை, மனக்குழப்பம், தெய்வ சிந்தை, போசன சுகம்.

**கன்னி**
உணர்ச்சிவசப்படுதல், தந்தைவழி உறவு, திடீர் பயணம், எதிர்பாராதசெலவு

**துலாம்**
எடுத்தகருமங்கள் யாவும் நிறைவேறும், தெய்வதரிசனம், பெரியோர் பாராட்டு, பொருள் சேர்க்கை.

**விருச்சிகம்**
நிலை மாற்றம், அதிகாரம், பிறருக்கு உதவுதல், நல்ல செய்தி.

**தனுசு**
ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, உடல்நலக் குறைவு, காரியசிந்தை.

**மகரம்**
எடுத்த காரியத்தில் தடை, தாமதங்கள் ஏற்படும், கலகம், பணச்செலவு, வியாதி.

**கும்பம்**
நல்லவரவேற்பு, பிரயாணம், தெய்வ சிந்தை, விருந்துபசாரம்.

**மீனம்**
சுகவாழ்வு, சத்துருஜெயம், செய்தொழில் முன்னேற்றம், பிறர் உதவி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# யாழ். தேர்தல் திணைக்களம் தேர்தல் பணிகளில் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேர்தல் திணைக்களம் தேர்தல்கள் சம்பந்தமான பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களோ, மாகாண சபைத் தேர்தல்களோ, பாராளுமன்றத் தேர்தல்களோ எது நடைபெற்றாலும், அதனை நடத்தி முடித்து வைப்பதற்கு யாழ். தேர்தல் திணைக்களம் தயார் நிலையில் இருப்பதாகத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேர்தல்களை நடத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்றுக்கு யாழ். தேர்தல் திணைக்கள உயர் அதுகாரி ஒருவர் அண்மையில் கொழும்பு சென்று திரும்பியதை அடுத்தே, யாழ். தேர்தல் திணைக்களத்தில் தேர்தல் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நிலவும் சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி 1990 ஆம் ஆண்டு கலைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண சபையின் தேர்தலையே முதல் நடத்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளதாகவும், அதற்கேற்றால்போல், மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அடுத்த வாரம் அளவில் அமைச்சரவையில் ஆராயப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# தவறவிட்ட அ.அட்டைகளை பெற்றுக்கொள்ள அழைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தில். ஆலயச் சூழலில் தவறவிடப்பட்ட ஒருதொகுதி அடையாள அட்டைகள் நல்லூர் உற்சவகால செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் நேரில் சென்று பெற்றுக்கொள்ள முடியும்.

பொன்னுத்துரை ரஞ்சனா - கச்சாய் வீதி, கொடிகாமம்.

ராஜேஸ்வரி சின்னத்தம்பி - ஏழாலை.

நாகேந்திரம் கவிதா - கரவெட்டி.

ஜெயதாஸ் ஜெயந்தினி - கைதடி வடக்கு.

பாக்கியலட்சுமி சின்னப்பிள்ளை - இல.86, வட்டுக்கோட்டை கிழக்கு.

இராசேந்திரம் கஜேந்திரன் - சுமிததிரராஜ மாவத்தை கொழும்பு.

தலானந்தம் பெரியதம்பி - வட்டுக்கோட்டை மேற்கு ஆகியோரின் தேசிய அடையாள அட்டைகளும், **விசேட அடையாள அட்டை**

சின்னத்துரை நிரஞ்சனதேவி - சண்டிலிப்பாய் வடக்கு.

சறோஜாதேவி வீரசிங்கம் - சாவகச்சேரி.

ஞானலிங்கம் கோபாலகிருஷ்ணன் - உடுவில்.

பொன்னுத்துரை ரஞ்சனா - சாவகச்சேரி.

இராமச்சந்திரன் சுகிதா - கோப்பாய்.

ஆறுமுகம் பாலசுப்பிரமணியம் - நல்லூர்.

குமரவேலு சசிகலா - வட்டுக்கோட்டை தெற்கு.

அமிர்தகௌரி சிதம்பரநாதன் - அல்வாய் வடக்கு.

புவனசாந்தம் பஞ்சாட்சரம் - சாவகச்சேரி ஆகியோரின் விசேட அடையாள அட்டைகளுமே இவ்விதம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (உ-7)

## கி.சே.அலுவலர்களுக்கு பயிற்சிப் பட்டறை

(மருதங்கேணி)

கிராம ரீதியாக போருட் நிறுவனத்தின் அபிவிருத்தித் திட்டங்களை எவ்வாறு மேற்கொள்ளுவது என்பது தொடர்பாக கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 25 ற்குமமேற்பட்ட கிராமசேவக அலுவலர்களுக்கு பயிற்சிப் பட்டறை நடத்தப்படுகிறது.

போரூட் நிறுவனத்தின் வேலைத் திட்டங்களை, செயற்பாடுகளை மக்கள் மத்தியில் விரிவுபடுத்துவது சம்பந்தமாக இப் பயிற்சிப் பட்டறை நடத்தப்படுகிறது. (பி-35)

# இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராக ஜே.வி.பி. பாதயாத்திரை

(கொழும்பு)

வடக்கு- கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி. நேற்று முன்தினம் நான்கு கட்டப் பாதயாத்திரையைக் கொழும்பில் ஆரம்பித்துள்ளது.

காலியில் ஆரம்பமான பாதயாத்திரை நான்கு கட்டங்களாக கொழும்பை வநதடைந்ததும், அங்கு விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.

காலியில் ஆரம்பமான பாதயாத்திரையில் ஜே.வி.பி யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டுள்ளனர்.

பெரும் திரளான மக்கள் இதில் கலந்து கொண்டுள்ளதால், வன்முறைச் சம்பவங்கள் நிகழலாம் என்பதற்காகப் பெரும் அளவிலான பொலிஸார் பாதயாத்திரைக்குப் பாதுகாப்பு வழங்கிவருகின்றனர். (இ-3)

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்புக்கு மேலும் 1500 பேர் குலுக்கல் மூலம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதி செலுத்தியவர்களில் மற்றுமோர் தொகுதியினருக்கு கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளது.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட இந்த ஆயிரத்து 500 பேருக்குமான மீட்புநிதி மீளளிப்பானது, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளதாக தமிழீழ நிதிப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

மீளளிப்புச் செய்யப்படவுள்ளவர்களின் பெயர், விபரங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு,

## பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| யா/பரு/3 | தங்கராசா மால்மருகசிலசூடாமணி |
| யா/பரு/83 | திருமதி. சிவகாமிஅம்மா கந்தசாமித்துரை |
| யா/பரு/107 | திருமதி. ஞாரத்தினம் தங்கேஸ்வரன் |
| யா/பரு/111 | இராசகுருஐயர் சின்னத்துரைஐயா |
| யா/பரு/147 | சேவர்த்தனா நடனலிங்கம் |
| யா/பரு/159 | பொன்னுச்சாமி இராமச்சந்திரன் |
| யா/பரு/183 | திருமதி. இராஜாமணி உருத்திரவேல் |
| யா/பரு/264 | அருளம்பலம் ரவீந்திரதாஸ் |
| யா/பரு/285 | திருமதி. மகாலக்ஷ்சுமி விநாயகமூர்த்தி |
| யா/பரு/364 | நாகமணி தனபாலசிங்கம் |
| யா/பரு/411 | சபாரத்தினம் சிவஞானசுந்தரம் |
| யா/பரு/469 | அருளம்பலம் ராம்குமார் |
| யா/பரு/485 | திருமதி. சந்திராதேவி துரைராசா |
| யா/பரு/548 | இரத்தினசிங்கம் பசுபதி |
| யா/பரு/612 | திருமதி. சரோஜா செல்வரெட்ணம் |
| யா/பரு/632 | முத்தையா கதிரவேற்பிள்ளை |
| யா/பரு/668 | திருமதி. சின்னப்பிள்ளை கணபதிப்பிள்ளை |
| யா/பரு/675 | சூசைப்பிள்ளை சகாயரட்ணராஜா |
| யா/பரு/690 | தவலிங்கம் இரவீந்திரா |
| யா/பரு/703 | மயிலு நாகராசா |
| யா/பரு/740 | ஏரம்பு வேலுப்பிள்ளை |
| யா/பரு/834 | பாலகிருஷ்ணன் இரகுநாதன் |
| யா/பரு/854 | திருமதி. பிறேமராணி ஜெயானந்தம் |
| யா/பரு/879 | முத்துசாமி லோகேஸ்வரன் |
| யா/பரு/886 | சிவகுரு தங்கவடிவேலு |
| யா/பரு/911 | சோமசுந்தரம் பாலேந்திரன் |
| யா/பரு/1081 | திருமதி. விஜயலட்சுமி பாலசிங்கம் |
| யா/பரு/1121 | கொண்ட்றங்கிசெட்டிமார் சிவக்கொழுந்து |
| யா/பரு/1146 | விமலா வல்லிபுரம் |
| யா/பரு/1180 | சிவராமலிங்கம் சுகிர்தலிங்கம் |
| யா/பரு/1216 | திருமதி. சந்திரவதனா நித்தியானந்தன் |
| யா/பரு/1261 | கந்தசாமி மகேந்திரராசா |
| யா/பரு/1267 | திருமதி. சாந்தினி கிருஷ்ணன் |
| யா/பரு/1280 | அல்பிறற் தங்கராசா அலோசியஸ் தேவராசா |
| யா/பரு/1288 | இரத்தினசாமி தங்வேலாயுதம் |
| யா/பரு/1304 | திருமதி. சந்திரமணி விநாயகமூர்த்தி |
| யா/பரு/1380 | இரத்தினம் தங்கராஜா |
| யா/பரு/1398 | திருமதி. இரத்தினகாந்தி சண்முகவடிவேல் |
| யா/பரு/1429 | கணபதிப்பிள்ளை செல்லத்துரை |
| யா/பரு/1434 | திருமதி. பகீரதி கணேசமூர்த்தி |
| யா/பரு/1508 | திருமதி. தவமணி சண்முகநாதன் |
| யா/பரு/1521 | வீரகத்தி கணபதிப்பிள்ளை |
| யா/பரு/1606 | இராஜரட்ணம் தருமபாலா |
| யா/பரு/1609 | திருமதி. காங்கேஸ்வரி தனபாலசிங்கம் |
| யா/பரு/1622 | திருமதி. வத்சலா ரங்கநாதன் |
| யா/பரு/1634 | திருமதி. மணிமேகலை இராமச்சந்திரன் |
| யா/பரு/1649 | திருமதி. பரமேஸ்வரி சபாநாதன் |
| யா/பரு/1657 | திருமதி. திரேஸ்நவமணி இருதயராசா |
| யா/பரு/1664 | திருமதி. மேரி மெக்டலீன் அரியநாயகம் |
| யா/பரு/1758 | திரு. சுப்பையா நந்தகுமார் |
| யா/பரு/1852 | திருமதி. மகமாசிஅம்மா பாலசுப்பிர மணியம் |
| யா/பரு/1909 | வைத்திலிங்கம் ஆனந்தலிங்கம் |
| யா/பரு/1929 | திருமதி. ஜெயதேவி கண்ணப்பசாமி |
| யா/பரு/2074 | திருமதி. சுந்தரம்மாள் திருநாவுக்கரசு |
| யா/பரு/2079 | திருமதி. குணஈஸ்வரி பிறேமச்சந்திரன் |
| யா/பரு/2137 | கணபதிப்பிள்ளை பீதாம்பரம் |
| யா/பரு/2198 | பவானி இராசரட்ணம் |
| யா/பரு/2222 | திருமதி. செல்வத்திரவியம் சின்னராசா |
| யா/பரு/2267 | திருமதி. திரேசம்மா யேசுதாசன் |
| யா/பரு/2349 | நடராசா துரைச்சாமி |
| யா/பரு/2387 | திருமதி. சிவகாமியம்மா உலகநாதன் |
| யா/பரு/2435 | மூத்ததம்பி ஏரம்பு |
| யா/பரு/2489 | கனகசுந்தரம் சிதம்பரநாதன் |
| யா/பரு/2541 | சிவசுப்பிரமணியஐயர் மாதவராசா |
| யா/பரு/2568 | கதிரேசு இராசையா |
| யா/பரு/2592 | கெளரி பெரியதம்பி |
| யா/பரு/2655 | வேலுப்பிள்ளை கார்த்திகேசு |
| யா/பரு/2657 | செல்லத்தம்பி அருச்சுனா |
| யா/பரு/2774 | பொன்னையா செல்வகிருஷ்ணன் |
| யா/பரு/2782 | இராசா கார்த்திகேசு |
| யா/பரு/2785 | சுப்பிரமணியம் சுந்தரராசன் |
| யா/பரு/2814 | கந்தையா நடராசா |
| யா/பரு/2863 | பொன்னையா மாணிக்கம் |
| யா/பரு/2868 | திருமதி. மேரி அமிர்தம்மா பக்கஸ் |
| யா/பரு/2878 | திருமதி. தெய்வானை சந்திரசேகரம் |
| யா/பரு/2955 | திருமதி. பூரணம் முருகுப்பிள்ளை |
| யா/பரு/3095 | திருமதி. விசாகலக்ஷ்மி அம்மா பரமயோக ராஜசிங்கம் |
| யா/பரு/3104 | ஞானப்பிரகாசம் ஜோசேப்பு |
| யா/பரு/3111 | வேலுப்பிள்ளை நடராசா |
| யா/பரு/3112 | திருமதி. றெஜினா யோகநாதன் |
| யா/பரு/3122 | வயிரமுத்து சிவலிங்கம் |
| யா/பரு/3194 | செல்லத்துரை விக்னேஸ்வரன் |
| யா/பரு/3196 | யேட்றூட் ஜெயசீலி மனுவேற்பிள்ளை |
| யா/பரு/3279 | திருமதி. சுசீலாதேவி நிரஞ்சன் |
| யா/பரு/3300 | நடராசா நாகேந்திரராசா |
| யா/பரு/3330 | நாகேந்திரஐயர் சுப்பிரமணியக்குருக்கள் |
| யா/பரு/3343 | முருகுப்பிள்ளை பொன்னம்பலம் |
| யா/பரு/3377 | திருமதி. மீனாட்சி சங்கரன் |
| யா/பரு/3429 | திருமதி. ஜெயலக்சுமி செல்வரவீந்திர குமார் |
| யா/பரு/3462 | கிருபாஞ்சனா ஈசுரபாதம் |
| யா/பரு/3610 | வல்லிபுரம் ரவிதாஸன் |
| யா/பரு/3618 | வேலுப்பிள்ளை செல்லத்துரை |
| யா/பரு/3745 | திருமதி. நாகரத்தினேஸ்வரி பரமானந்தம் |
| யா/பரு/3770 | கந்தையா திருஞானம் |
| யா/பரு/3779 | சித்திரவடிவேலு சிவானந்தராசா |
| யா/பரு/3784 | சண்முகராஜா சிவகுமார் |
| யா/பரு/3826 | ஆனந்தசாமி நாராயணசாமி |
| யா/பரு/3874 | திருமதி. தில்லைநாயகி பாலகிருஸ்ணன் |
| யா/பரு/3898 | திருமதி. சிவானந்தவல்லி பூரணச்சந்திரன் |
| யா/பரு/3905 | திருமதி. தில்லைராணி சண்முகநாதர் |
| யா/பரு/3939 | வல்லிபுரம் கந்தையா |
| யா/பரு/4035 | திருமதி. இராசம்மா யேசுதாசன் |
| யா/பரு/4081 | கந்தையா நல்லசிவம் |
| யா/பரு/4086 | திருமதி. ஜெனற் ஜெயக்குமாரி திபூசியஸ் |
| யா/பரு/4131 | பொன்னம்பலம் நவரத்தினராசா |
| யா/பரு/4250 | திருமதி. தங்கம் வல்லிபுரம் |
| யா/பரு/4276 | சின்னத்தம்பி பிள்ளையன் |
| யா/பரு/4299 | தம்பையா மாணிக்கவாசகம் |
| யா/பரு/4324 | திருமதி. மாதரசி பாலசுந்தரம் |
| யா/பரு/4333 | திருமதி. கமலவதி சிவசுப்பிரமணியம் |
| யா/பரு/4334 | ஞானசக்தி இராமநாதன் |

## சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

| தொடர்பு எண் | முழுப்பெயர் |
|---|---|
| யா/சா/22 | சுப்பையா மகேந்திரன் |
| யா/சா/88 | திருமதி. மங்கையர்கரசி துரைராஜா |
| யா/சா/166 | அப்பாபிள்ளை சுப்பிரமணியம் |
| யா/சா/259 | பிரமீளா குணரத்தினம் |
| யா/சா/296 | அம்பலவாணர் வேலாயுதம் |
| யா/சா/389 | கார்த்திகேசு செல்லத்துரை |
| யா/சா/429 | குமாரசாமி சுப்பிரமணியம் |
| யா/சா/432 | நட்சத்திரம் பெனடிக்ற் |
| யா/சா/490 | சின்னப்பா பொன்னுத்துரை |
| யா/சா/522 | தம்பையா சிவப்பிரகாசம் |
| யா/சா/544 | திருமதி. வனிதகலா சுந்தரலிங்கம் |
| யா/சா/609 | சிதம்பரப்பிள்ளை விஜயரத்தினம் |
| யா/சா/647 | அரியகுட்டி வன்னியசிங்கம் |
| யா/சா/683 | சதாசிவம் கனகரத்தினம் |
| யா/சா/784 | பொன்னையா கந்தையா |
| யா/சா/806 | திருமதி. தங்கம்மா மாணிக்கம் |
| யா/சா/863 | அருணாசலம் சிவஞானம் |
| யா/சா/874 | கனகசபை சிவகுருநாதன் |
| யா/சா/884 | திருமதி. இரஞ்சிதமலர் ஞானசேகரம் |
| யா/சா/893 | நவரத்தினம் ஆனந்தராசா |
| யா/சா/906 | திருமதி. பகவதியம்மா சங்கரலிங்கம் |
| யா/சா/951 | திருமதி. மனோன்மணி நவரத்தினம் |
| யா/சா/1026 | நவரத்தினம் திருநீலகண்டன் |
| யா/சா/1033 | மாணிக்கம் ஞானசேகரம் |
| யா/சா/1072 | திருமதி. குஞ்சு தேவராசா |
| யா/சா/1088 | வல்லிபுரம் தேவராசா |
| யா/சா/1099 | சபாபதி சுப்பிரமணியம் |
| யா/சா/1157 | நிரோஜினி நடேசபிள்ளை |
| யா/சா/1167 | திருமதி. கனகம்மா பஞ்சாட்சரம் |
| யா/சா/1181 | திருமதி. நாகராணி ஞானசேகரம் |
| யா/சா/1182 | சபாரத்தினக்குருக்கள் இராமச்சந்திரஐயர் |
| யா/சா/1193 | பாலகிருஸ்ணன் வயிரவநாதன் |
| யா/சா/1214 | நடராசா பிரபாகரன் |
| யா/சா/1243 | கணபதிப்பிள்ளை அருணாசலம் |
| யா/சா/1250 | செவ்வந்திநாதஐயர் பரமானந்தக்குருக்கள் |
| யா/சா/1388 | திருமதி. தவமணிதேவி நடேசபிள்ளை |
| யா/சா/1399 | கந்தையா ஆறுமுகம் |
| யா/சா/1405 | கந்தையா சின்னராசா |
| யா/சா/1426 | அன்னதேவன் ஆனந்ததேவன் |
| யா/சா/1532 | நடராசா விக்கினேஸ்வரன் |
| யா/சா/1740 | திருமதி. கோமளேஸ்வரி கங்காதரன் |
| யா/சா/1769 | பொன்னுத்துரை திருநாவுக்கரசு |
| யா/சா/1792 | சின்னத்தம்பி வீரகத்தி |
| யா/சா/1878 | கந்தையா சுப்பிரமணியம் |
| யா/சா/1928 | திருமதி. சிவசோதி அற்புதநாதன் |
| யா/சா/1973 | திருமதி. இந்திராணி கனகசபை |
| யா/சா/2043 | தாமோதரம்பிள்ளை கனகசிங்கம் |
| யா/சா/2071 | சின்னத்துரை கார்த்திகேசு |
| யா/சா/2097 | திருமதி. தனலட்சுமி பாலச்சந்திரன் |
| யா/சா/2162 | திருமதி. ஜோதிமலர் செல்லத்துரை |
| யா/சா/2203 | திருமதி. இரத்தினவதி செல்லத்துரை |
| யா/சா/2250 | வீரகத்தி கந்தையா |
| யா/சா/2269 | சபாரத்தினம் நடராசா |
| யா/சா/2344 | சின்னக்குட்டி திருநாவுக்கரசு |
| யா/சா/2374 | திருமதி. நிர்மலாதேவி கிருஸ்ணகுமார் |
| யா/சா/2398 | திருமதி. நந்தினி சிவபாலன் |
| யா/சா/2404 | திருமதி. புஸ்பராசம் செல்லத்தம்பி |
| யா/சா/2409 | திருமதி. மங்களேஸ்வரி தர்மரட்ணம் |
| யா/சா/2432 | இராசையா ஜெகதீஸ்வரன் |
| யா/சா/2439 | வைத்திலிங்கம் இராசரத்தினம் |
| யா/சா/2484 | நவரத்தினம் கஜேந்திரன் |
| யா/சா/2506 | வல்லிபுரம் சின்னையா |
| யா/சா/2522 | முத்தையா திசநாயகம் |
| யா/சா/2626 | வல்லிபுரம் நவரத்தினம் |
| யா/சா/2658 | தாமோதரம்பிள்ளை மகேஸ்வரன் |
| யா/சா/2678 | திருமதி. கலாநிதி நாகேந்திரன் |
| யா/சா/2744 | திருமதி. மகேஸ்வரி கந்தசாமி |
| யா/சா/2859 | கந்தையா தங்கவேலு |
| யா/சா/2880 | வேலு சின்னத்தம்பி |
| யா/சா/2883 | பத்மாவதி தர்மகுலசிங்கம் |
| யா/சா/2889 | சின்னையா முருகர் |
| யா/சா/3000 | திருமதி. லிங்கேஸ்வரி பரமநாதன் |
| யா/சா/3011 | திருமதி. தவராணி செல்வராசா |
| யா/சா/3017 | சரவணமுத்து கந்தையா |
| யா/சா/3025 | திருமதி. இராசம்மா கோவிந்தசாமி |
| யா/சா/3037 | நந்தினி சுப்பிரமணியம் |
| யா/சா/3113 | சிதம்பரப்பிள்ளை சச்சிதானந்தன் |
| யா/சா/3125 | சதாசிவம் ஜெயசிங்கம் |
| யா/சா/3148 | ஏகாம்பரநாதன் பரஞ்சோதி |
| யா/சா/3157 | செல்லையா நடராசா |
| யா/சா/3220 | திருமதி. நாகம்மா தர்மரட்ணம் |
| யா/சா/3244 | திருமதி. சறோஜா செல்வராஜா |
| யா/சா/3292 | ஐயாத்துரை தங்கராசா |
| யா/சா/3346 | திருமதி. சிவக்கொழுந்து சண்முகானந்தன |
| யா/சா/3348 | திருமதி. தவமணி ஈஸ்வரதாஸ் |
| யா/சா/3362 | இராசாம்பாள் ஆறுமுகம் |
| யா/சா/3405 | சின்னத்தம்பி சுப்பிரமணியம் |
| யா/சா/3412 | தில்லை சின்னத்தம்பி |
| யா/சா/3416 | திருமதி. பரமேஸ்வரி கதிர்காமர் |
| யா/சா/3433 | வயிரவன் அருணாசலம் |
| யா/சா/3460 | திருமதி. தெய்வானைப்பிள்ளை நல்லையா |
| யா/சா/3497 | விசுவலிங்கம் யோகேஸ்வரன் |
| யா/சா/3558 | திருமதி. கமலாம்பிகை குலசிங்கம் |
| யா/சா/3570 | அருணாசலம் சின்னையா |
| யா/சா/3575 | வல்லிபுரம் அருளானந்தம் |
| யா/சா/3608 | திருமதி. தங்கம்மா கணபதிப்பிள்ளை |
| யா/சா/3673 | சின்னத்தம்பி மயில்வாகனம் |
| யா/சா/3758 | கந்தையா தம்பிராசா |
| யா/சா/3797 | முத்துக்குமாரு அருளானந்தம் |
| யா/சா/3803 | பேரம்பலம் நடராசா |
| யா/சா/3835 | சோமசுந்தரம் வைத்திலிங்கம் |
| யா/சா/3841 | சுப்பையா யோகராசா |
| யா/சா/3896 | சிவசாந்தினி அமிர்தலிங்கம் |
| யா/சா/3984 | வேலுப்பிள்ளை செல்லத்துரை |
| யா/சா/4000 | முருகர் பொன்னையா |
| யா/சா/4029 | வல்லி கனகன் |
| யா/சா/4088 | வயிரன் லோகநாதன் |
| யா/சா/4105 | பொன்னையா சிற்றம்பலம் |
| யா/சா/4129 | முருகேசு ஈசுரபாதம் |
| யா/சா/4135 | தம்பு வேலுப்பிள்ளை |
| யா/சா/4200 | வீரகத்தி சிற்றம்பலம் |
| யா/சா/4210 | பொன்னையா பரமேஸ்வரன் |
| யா/சா/4254 | முருகேசு சுப்பிரமணியம் |
| யா/சா/4320 | வேலாயுதம் யோகராசா |
| யா/சா/4415 | வேலுப்பிள்ளை தில்லைநாதன் |
| யா/சா/4508 | திருமதி. தவமணி கார்த்திகேசு |
| யா/சா/4563 | செல்லத்துரை துரைசிங்கம் |
| யா/சா/4586 | சின்னத்தம்பி சுந்தரலிங்கம் |
| யா/சா/4591 | திருமதி. சீதேவிப்பிள்ளை சிவக்கொழுந்து |
| யா/சா/4649 | கார்த்திகேசு முருகேசு |
| யா/சா/4755 | திருமதி. உருக்குமணி சிவராசா |
| யா/சா/4767 | திருமதி. இராசேஸ்வரி ஜெயரூபன் |
| யா/சா/4795 | திருமதி. கலாநிதி ஸ்ரீகாந்தன் |
| யா/சா/4824 | இந்திரா ஆசைப்பிள்ளை |
| யா/சா/4829 | கந்தையா சுவாமிநாதன் |
| யா/சா/4837 | சூசைப்பிள்ளை அருள்ரூபன் |
| யா/சா/4892 | கணபதிப்பிள்ளை சரவணமுத்து |
| யா/சா/4919 | நல்லையா கனகரத்தினம் |
| யா/சா/4929 | திருமதி. மகாலட்சுமிதேவி வரதராசா |
| யா/சா/5013 | திருமதி. தெய்வானைப்பிள்ளை கந்தையா |
| யா/சா/5014 | முருகன் சின்னத்தம்பி |
| யா/சா/5022 | சின்னவன் கந்தன் |
| யா/சா/5034 | நீக்கிலாப்பிள்ளை யோசேப்பு |
| யா/சா/5089 | கோவிந்தன் கந்தர் |
| யா/சா/5115 | கந்தையா மகேந்திரராஜா |
| யா/சா/5176 | முருகுப்பிள்ளை குலசிங்கம் |
| யா/சா/5207 | திருமதி. தேவமனோகரி கதிர்காமநாதன் |
| யா/சா/5264 | வேலுப்பிள்ளை செல்லையா |
| யா/சா/5280 | செபஸ்தியாம்பிள்ளை மரியானந்தராஜா |
| யா/சா/5294 | கதிரவேற்பிள்ளை மகாலிங்கம் |
| யா/சா/5325 | வல்லிபுரம் நல்லையா |
| யா/சா/5329 | திருமதி. இலட்சுமிப்பிள்ளை பொன்னையா |
| யா/சா/5346 | திருமதி. துஸ்யந்தி யோகராசா |
| யா/சா/5368 | சங்கரப்பிள்ளை அருணாசலம் |
| யா/சா/5451 | தர்மலிங்கம் சிறீதரன் |
| யா/சா/5605 | புஸ்பராணி சிவபாதசுந்தரம் |
| யா/சா/5616 | முருகன் நாகன் |
| யா/சா/5629 | மயில்வாகனம் அமிர்தலிங்கம் |
| யா/சா/5636 | வேலன் கிட்டினன் |
| யா/சா/5639 | குருநாதி கதிரவேலன் |
| யா/சா/5807 | அண்ணாமலை இரத்தினசிங்கம் |
| யா/சா/5824 | முருகன் கந்தசாமி |
| யா/சா/5911 | கணபதி சுப்பிரமணியம் |
| யா/சா/5970 | சிதம்பரம் குமாரசாமி |
| யா/சா/6015 | திருமதி. சந்திரராணி மகேந்திரன் |
| யா/சா/6039 | சிவகுரு குலராசசிங்கம் |
| யா/சா/6054 | திருமதி. சிவலோகநாயகி நவபாலன் |
| யா/சா/6100 | விநாயகமூர்த்தி கந்தசாமி |
| யா/சா/6144 | கனகசபை லோகநாதன் |
| யா/சா/6167 | சங்கரப்பிள்ளை தேவகாந்தன் |
| யா/சா/6265 | செல்லப்பா செல்வராஜா |
| யா/சா/6297 | திருமதி. தனலட்சுமி சிறீகாந்தா |
| யா/சா/6301 | செல்லையா அருளம்பலம் |
| யா/சா/6322 | காசிப்பிள்ளை நடராசா |
| யா/சா/6408 | வட்டன் செல்வராசா |
| யா/சா/6462 | சுப்பையா கிட்ணன் |
| யா/சா/6509 | திருமதி. மேரி மாக்கிறேட் பாக்கியநாதன் |
| யா/சா/6601 | சுப்பையா கயிலாயபிள்ளை |
| யா/சா/6628 | சபாரத்தினம் திருலோகசிங்கம் |
| யா/சா/6702 | முருகப்பா நடராசசுந்தரம் |
| யா/சா/6716 | தளையசிங்கம் அகத்தியர் |
| யா/சா/6725 | தம்பு சபாரத்தினம் |
| யா/சா/6734 | இளையதம்பி ஜெகசோதி |
| யா/சா/6742 | இளையதம்பி செகராசா |
| யா/சா/6773 | சின்னத்தம்பி நவரத்தினம் |
| யா/சா/6783 | பரமசாமிஐயர் சண்முகநாதன் |
| யா/சா/6794 | கந்தையா அமிர்தலிங்கம் |
| யா/சா/6831 | திருமதி. செல்லம்மா செல்லையா |
| யா/சா/6913 | சின்னையா சேனாதிராசா |
| யா/சா/6948 | திருமதி. தங்கமுத்து யோகராசா |
| யா/சா/6949 | சின்னத்தம்பி சண்முகம் |
| யா/சா/6959 | கந்தன் கணபதி |
| யா/சா/6972 | தர்மலிங்கம் தங்கராசா |
| யா/சா/6982 | சிவசம்பு சண்முகநாதன் |
| யா/சா/7027 | கந்தையா அன்ரன் இராசசிங்கம் |
| யா/சா/7485 | முருகன் நாகேந்திரம் |
| யா/சா/9953 | பொன்னுத்துரை கனகசபாபதி |

(தொடரும்)

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்.

*அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை*
*இன்மையா வையாது உலகு*
*– குறள்*

வலம்புரி

## தமிழ் எம்.பிக்கள் என்ன செய்வர்!

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கென தனியான பொலிஸ் பிரிவை அமைக்கும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டது.

முஸ்லிம்களின் பாதுகாப்புக்கென தனியான பொலிஸ் பிரிவை அமைப்பது இன ரீதியான பேதப்படுத்தலுக்கு வழிவகுக்கும் எனவும், அதனால் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனவும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து எடுத்துக் கூறியிருந்தனர்.

இருந்தும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிககைகளை ஏற்றுக் கொள்ளாத பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பொலிஸ் ஆட்சேர்ப்புக்கான உத்தரவை வழங்கியுள்ளதுடன் அதற்கான நேர்முகப் பரீட்சையும் நடந்து முடிந்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்த தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்றஉறுப்பினர்களின் கருத்தைக் கேட்டு அறிந்து கொண்ட பிரதமர் ரணில், தமிழ் எம்.பக்களைப் பார்த்து கிழககு மாகாணத்தில் இடம் பெறவுள்ள பொலிஸ் ஆட்சேர்பபுக் குறித்து உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்காவையும், பொலிஸ்மா அதிபர் ஆனந்தராசாவையும் சந்தித்து நிலைமையை எடுத்துக் கூறுமாறு சொல்ல எம்.பிக்களும் ஆமா சாமி போட்டு விட்டு...எழுந்து வந்து விட்டனர்.

பிரதமரைச் சந்திக்கப் போனவர்கள் தமது தரப்பு நியாயங்களைக் கூறிவிட்டால் பிரதமரே உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருடன் ஆலோசனை நடத்தி முடிவெடுக்க வேண்டும். இதனை விடுத்து பொலிஸ் ஆட்சேர்ப்புப்பற்றி உள்நாட்டு அலுவலகள் அமைச்சரையும் சந்தித்து கூறுங்கள் எனப் பிரதமர் கூறியிருப்பார் ஆயின் ஒன்றில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கையாலாகாதவராக இருக்க வேண்டும். அல்லது தமிழ் எம்.பிக்கள் எதனையும் கிரகித்து- சிந்தித்து விளங்கிக் கொள்ளும் ஆற்றலில் பஞ்சமுடையவர்களாக இருக்க வேண்டும்.

பிரதமரைச் சந்தித்து நிலைமையை எடுத்துக் கூறிய பின்னர், உள்நாட்டு அலுவல்கள அமைச்சரை சந்திப்பதென்பது அறியாமையின் வெளிப்பாடு.

ஆக,பிரதமரைச் சந்தித்து நிலைமையை எடுத்துக் கூறிய பின்னரும் பொலிஸ் ஆட்சேர்புக்கான நேர்முகப பாட்சை நடைபெற்றுள்ளதெனில் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதை தமிழ் மக்கள் மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

அமைச்சர் ரவூப் ஹக்கீமின் இராசதந்திரம் தமிழ் எம். பிக்களிடம் கொஞ்சமேனும் இருக்கக் கூடாதா என்ற கேள்வியும் ஏக்கமும் தமிழ மக்களிடம் எழுவது நியாயமானதாக இருப்பினும் மறுபுறத்தில் இலங்கைப் பாராளுமன்றததில் தமிழ் எம்பிக்களின் அங்கத்துவத்தின் பயனும் நன்மையும் என்ன?

# உளத்தாக்கங்களிலிருந்து விடுபட உதவும்

# மனோதத்துவ சிகிச்சை முறைகளை அறியலாமே!

கருவறையில் தோன்றும் பிரச்சினைகள் கல்லறைவரை மாறி மாறி வருகின்றன. பிரச்சினைகளை எதிர் கொள்ளாதவர்கள் இல்லை. நமககு பரச்சினை இருக்கலாமே தவிர நாமே பிரச்சினைக்குரியவராக மாறி விடக கூடாது. சிலரால் பிரச்சினைகளை சமாளிக்க முடிகிறது. சிலா் பிறரின் உதவியோடு சமாளிக்கின்றனர். வேறு சிலரோ பிரச்சினை எனும் சூழலில் சிக்கித் தவிக்கின்றனர். உளவியல் வழிகாட்டுதலின எதிர்கொள்ளும் வலிமையை ஊட்டி, மனிதனின் திறமைகளை வளர்த்து நடத்தையில் மாறுதலை உண்டாக்குவதாகும். இவற்றிக்குத் தீர்வுகாண அவர்களை தயார் செய்வதாகும்.

எவ்வாறு படிப்பது, நினைவாற்றலை வளர்த்துக்கொள்வது எவ்வாறு? நல்ல மணவாழ்வை அமைத்துக்கொள்வது, பிணக்குகளையும், சிக்கல்களையும விடுத்து இணக்கமான வாழ்வை அமைத்துக்கொள்வது எப்படி? என்பன போன்ற சாதாரண பிரச்சினைகளுக்கு ஆலோசனை கூறி வழிகாட்டுவது உளவியலாளரின் ஒரு பணியாகும்.

பிரச்சினைகளில் சிக்குண்டு மூழ்கி, என்ன செய்வது என்று தெரியாது திக்குத் தெரியாத காட்டில் திகைத்து நிற்பவர்களுக்கும், பதட்டம், பயம உணர்ச்சிவசப்படுதல், ஊக்கமின்மை, நரம்புத்தளர்ச்சி, அர்த்தமற்ற செயல்களைச்செய்யத் துடிக்கும் உந்துதல், மறதி போன்றவற்றிற்கும் உளசிகிச்சை தேவைப்படுகிறது. உளநல ஆலோசகர் பிரச்சினைகளைச் சமாளிக்கும் முறைகளையும், திட்டங்களையும் கற்றுத் தருகிறார்கள். பிரச்சினையைகொண்டவருக்கு எல்லாத் தகுதிகளும் திறமைகளும் இருக்கின்றன. புதிய கண்ணோட்டத்துடன் அந்தப் பிரச்சினையை அணுகும் முறை அவருக்குத் தெரியவில்லை என்ற அடிப்படையில் பிரச்சினையின் எல்லாப் பரிணாமங்களையும் அவருக்கு விளக்குவதே வழிகாட்டியின் கடமையாகும்.

அவரின் நிறை - குறைகள், திறமைகள், ஆர்வங்கள், அணுகுமுறை ஆகியவற்றை ஆராய்ந்து பின்னர் பிரச்சினையைத் தானாகவே சமாளிக்கும் முறைகளையும் விளக்க வேண்டும். எனவே, இதன் முக்கிய நோக்கம் அவரது பிரச்சினையைப் புரியவைத்து, சிந்திக்கவைத்து, அதனை அவரே சமாளிக்கும் சக்தியைக் கற்றுத் தருவதேயாகும். எனவேதான், ஒருவரைப் பிரச்சினை என்று கருதாமல், பிரச்சினையால் பாதிக்கபபட்டவர் என்று எண்ணிச் செயறபடவேண்டும்.

பிரச்சினை பல்வேறு வகையாக இருக்கலாம். ஆசிரியர் - மாணவர் உறவு, கணவன்- மனைவி உறவு, தோல்விகள, பணிசார்ந்த பிரச்சினைகள என பலவகைப்படும். எனவே, வழி காட்டி ஆலோசனை கூறுவதற்கு சில செய்திகள் மற்றும் விபரங்கள் வேண்டும்.

### மருத்துவ விளக்கம்

ஒருவரின் நுண்ணறிவு, சிறப்பான தனித்திறமைகள், முதிர்ச்சி, மனப் பக்குவம், அவர் கொண்டுள்ள மனப்பான்மை அபிப்பிராயங்கள், மதிப்பீடுகள், வாழ்வின் மீதுள்ள விடாப்பிடிப்பு பற்றுதல்கள், ஆர்வங்கள், தொழில் திறமை, ஊக்கம், படிப்பு-பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பாங்கு, தன்னைப் பற்றிக் கொண்டுள்ள எண்ணங்கள், கவலை, பதற்றம, மனப்போராட்டங்கள், இணங்கிப போகும் தன்மை, முரண்பாடுகள்- தற்காப்புமுறைகள், உடல்வாகு, சூழ்நிலை, வளர்ந்தமுறை, நண்பர்கள், தொழில் போன்றவைகளை ஆராய வேண்டும். இந்த விவகாரங்களைப் பெற பல்வேறு முறைகளுக்கான அளவீடுகள் உள்ளன.

### நேர்முக பேட்டி காணல்

பேட்டி காண்பது எனபது ஒரு சாதாரண எளிமையான செயலல்ல. முழுமையான விபரங்களைப் பெற இம்முறை மிகவும் இன்றியமையாதது.

இதன் அணுகுமுறை பற்றி வேறுபட்ட கருத்துகள் உள்ளன. ரோஜர்ஸ் போன்றவர்கள் வழிகாட்டுபவர் செவி மடுப்பவராக மடடுமே இருக்க வேண்டும். அவ்வப்போது ஒரு சில கேள்விகளை கேட்டு அதிகமான செய்திகளைப் பெறவேண்டும். அவ்வாறு அவர்கள் பலவிதமான கோணங்களில் சிந்திக்கச் செய்யும்போது, அவருக்கே உள்ளொளி பிறந்து வழி தெரிந்துவிடும் என்கிறார்கள். நேர்காணல், முறையால் மனஎழுச்சிகள், உணர்ச்சி வசப்படுதல் ஆகியவற்றின் வெளியாகும் உணர்வுகளையும் மனக்குமுறல்களையும் கண்டுகொள்ள முடியும்.

### உளச் சோதனைகள

உளவியல் வளர்ச்சியின காரணமாக பலவிதமான சோதனைச் சாதனங்கள் உருவாகி உள்ளன. ஆளுமை, நுண்ணறிவு, சிந்தனை, ஆற்றல்கள், ஆர்வங்கள, பிரச்சினைகளை சமாளிக்கும்முறை,மனநோய்கள் போன்ற பல்வேறு மனநிலைகளைத் துல்லியமாக அளவிடக்கருவிகள் உள்ளன. இவற்றின் பயன்களைப் பகுத்தறியவும் பயிற்சி வேண்டும். இயற்கையான சூழ்நிலையிலும் ஒருவரின் பிரச்சினையை ஆராய வேண்டிய அவசியம் ஏற்படலாம்.

பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களையும் உளப்பிணியாளர்கள் என்கிறோம். இவர்களால் தங்களின் பிரச்சினையை அறிய முடியவில்லை. உண்மை நிலையிலிருந்து விலகி தனக்கென சில செயல்முறைகளை வளர்த்துக்கொண்டு, அவற்றின மூலமாக பிரச்சினைகளை சமாளிக்க அல்லது மூடிமறைக்க முயல்வார்கள. இதன் காரணமாக பகல்கனவு, தளர்ச்சி, பதட்டம், பயம், கவலை, நரம்புத் தளர்ச்சி, ஹிஸ்டிரியா, சில செயல்களை திரும்பச் செய்யும் துடிப்பு சில எண்ணங்களால் அலைககளிக்கப்படும் நிலையெனப் பல்வேறு பிணிக்கூறுகளால் திண்டாடுகின்றனர்.

இவர்களுக்கு ,மனநோய் மருத்துவமனையில் சேர்த்து தீவிர சிகிச்சையளிக்க வேண்டிய கட்டாயம் இல்லை. இவர்களால் பிறருக்கு துன்பமல்லை. இருப்பினும் வேலையில் குறைபாடு, அக்கறையின்மை, விபத்து, இழப்பு போன்றவை ஏற்படலாம். அணுமுறையால் இதனைக் குணமாக்கும் உளவியலாளர்களிடையே கருத்து வேறுபாடுண்டு. ∴பிராய்டு போன்றவர்கள் அடிமனத்தை ஆராய்ந்து அதன் அடிப்படையான காரணத்தை அறிந்து வேரோடு அழிகக வேண்டும் என்கிறார்கள். பிறர் இதன் காரணம் தவறான கற்றல் முறைதான் என்றும் அறிகுறிகளை அகற்றுவதன் மூலம் குணமாக்கலாம் என்றும் கருதுகின்றனர்.

### உளபகுப்பு முறை

நோயாளிகளின் அடிமனத்தில் ஒடிக்கி வைக்கப்பட்டிருக்கும் நிறைவேறாத ஆசைகள், மனப் போராட்டங்கள், மனச் சிக்கல்கள் ஆகியவற்றை நினைவு நிலைக்குக் கொண்டு வந்து சிகிச்சை அளிக்கிறோம். இதில் நான்கு முக்கிய பகுதிகள் உள்ளன.

**1. உறவுமுறை**

நோயாளியோடு நெருக்கமான உறவை ஏற்படுத்திக்கொண்டு மனத தொடர்பு மூலம் அவரின் மன்த்தில் புதைந்து கிடக்கும் சிக்கல்களை அறிந்து கொள்வதாகும் நோயாளியை சுகமான இருக்கையில் அமரவைத்தோ அல்லது படுக்கவைத்தோ அவரைப் பேசவைப்பது, எவ்விதமான மனத்தடையும் இன்றி மனதில் தோன்றுவதை கூறச் செய்யவேண்டும். தனது குடும்பநிலை, தன்னுடைய உறவுமுறை, பிரச்சினைகள், குறைகள் என அனைத்தையும் பேசவைக்க வேண்டும். இது ஒருவகையில் மனபேதி போலவும் அமையும். நோயாளி பேசும்போது அவரிடம் ஏற்படும் முக மாறுதல்கள், உடல் உறுப்புகளில் ஏற்படும் மாறுதல்களைக் கவனிக்க வேண்டும்.

**2. கனவுகளை ஆராய்வது**

கனவுகள் மூலம் அடிமனத்தை அறிந்திட வேண்டும். ஒருவரின் கனவினை புற வெளிப்பாடு என்றும், உள்ளடக்கம் என்றும் வேறுபடுத்தி அதனை ஆய்வு செய்ய வேண்டும். ஒருவர் கனவில் கண்டதாகக் கூறும் செய்திகள், நபர்கள், பொருட்கள் ஆகியன கனவின் புற வெளிப்பாடு எனவும் அவைகளின் உள்ளார்ந்த பொருள்கள் கனவின் உள்ளடக்கம் என்றும் இவற்றை ஆராய்வதன் மூலம் நோயாளியின் மனநிலையை அறிய முடியும். இன்றைய ஆய்வாளர்கள் இக்கருத்தில் வேறுபடுகின்றனர்.

**3. அறிவியல் முறை**

நோயாளியை ஹிப்னாடிசம் எனும் அறிதுயிலுக்கு கொண்டு சென்று மனத்தடைகளை அகற்றி நோயாளியை வயப்படுத்தி கருத்தேற்றங்களின் மூலமாக குணப்படுத்துவது இம்முறையின் நோக்கம். இம்முறை மீது நம்பிக்கையும் குணம் பெறமுடியும் என்கிற உறுதியும் கொண்ட மனநிலை இதன் வெற்றிக்கு உதவும்.

**4. மயக்கமுறச் செய்வது**

ஹிப்னாடிசத்தில் குணமாக்க முடியாதவர்களுக்கு அல்லது அதற்கு இணக்கம் இல்லாதவர்களுக்கு ஊசி மருந்துகளைச் செலுத்தி மயக்க முறச் செய்து அவருடைய மனக்குமுறல்களைக் கண்டறிய இம்முறை பயன்படுகிறது. விருந்தினராக வந்த இடத்தில் ஒரு பெண் அவளுடைய சிற்றன்னையின் மகனின் ஆசை

ஜி.ராஜமோகன்

வாரததைகளைக் கேட்டு பலியாகி விடுகிறாள்- கன்னிப் பெண்- உறவுமுறையில் தடுமாற்றம்- குடும்பக் கௌரவம்- மனசாட்சி என்கிற மனப் போராட்டங்களின் விளைவால் மனச்சிதைவுகள் ஏற்படுகின்றது. சமூகம் மனசாட்சியும் (super ego) அங்கீகாரமும் செய்யாத செயல்கள் தன்னுணர்வை(ego) பாதிக்கின்றன. இதன் விளைவாக இந்தச் செயல்கள் தொடர்பான நிகழ்ச்சிகள் அனைத்தும் அடி மனத்துக்குள் தள்ளப்பட்டு விடுகின்றன. இவ்வாறு அடி மனதில் படிந்து விட்ட விஷயங்களை வெளிக்கொணர இம்முறை பயன்படுகின்றது.□

## பொங்குதமிழ்ச் சமூக ஏற்பாட்டில் திருகோணமலையில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு

(திருகோணமலை)

பொங்குதமிழ்ச் சமூகம் விடுத்துள்ள அழைப்பை ஏற்று நேற்று திருகோணமலையில் பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பிரிக்கும் யோசனை, கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கென பொலிஸ் சேவையில் முஸ்லிம் இளைஞர்களை சேர்த்துக் கொள்ளல், கிழக்கில் சட்ட விரோத குடியேற்றங்கள், தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்படும் அடங்கு முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், புலிகளின் இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கோரியுமே பொங்குதமிழ்ச் சமூகம் இக் ஹர்த்தாலை ஏற்பாடு செய்திருந்தது.

இக் ஹர்த்தால் காரணமாக நேற்று மூன்றாம் தவணைக்காக ஆரம்பமாகவிருந்த பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. அத்துடன், அரசதிணைக்களங்கள், வர்த்தக நிலையங்கள் என்பன மூடப்பட்டிருந்தன.

மாவட்டத்தின் போக்குவரத்துக்களும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)

### தினசரி தியானம்

### கீதை

கடவுள் பற்றிய கொள்கைகள் இல்லாத இயக்கங்களில் சேராதீர்கள். கடவுள்தான் சமுதாயத்தில் ஒரே அடிப்படை. கீதை படைப்பு நிலையங்களை உருவாக்குங்கள். கீதையைப் பற்றிய ஆரம்ப அறிவாவது உங்களுக்கு இருக்க வேண்டும். இப்போதிருந்தே இந்த அறிவை நீங்கள் பெற வேண்டும். நாளைக்கென ஒத்திப்போடதீர்கள்.கீதையைப் படித்தால் அது உங்களுக்குத் தெய்வீக வாழ்க்கையை மேற்கொள்ளவும் கடவுளை அடைவதற்கான நிலையைப் பெறுவதற்காகவுமான தாகத்தை ஏற்படுத்தும்.

சுவாமி சிவானந்தர்

## ஆஸ்பத்திரி பணியாளர்களின் லீவுகள் யாவும் இரத்து

(கொழும்பு)

அரசாங்க வைத்திய சாலைகளில் கடமையாற்றும் ஊழியர்களின் லீவு நேற்றுத் தொடக்கம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பி.தயாரட்ண அறிவித்துள்ளார்.

வைத்தியசாலைக் கடமைகளை ஒழுங்கான முறையில் நடைமுறைப் படுத்தவே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என அமைச்சின் செயலாளர் ரெஜிபெரேரா தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவைகள், இணைந்த தொழிற்சங்கங்களின் சம்மேளனக் கோரிக்கைகள் பற்றி ஆராய்வதற்கென கூட்டம் கூடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட போதிலும், தொழிற்சங்க அங்கத்தவர்கள் வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்க இருப்பது துரதிர்ஷ்டவசமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை,வைத்தியசாலை ஊழியர்களின் சுகவீன லீவுப் போராட்டம் திட்டமிட்டபடி இன்று நடைபெறும் என சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

அரச வைத்தியத் துறையில் பணிபுரியும் ஊழியர்களின் விடுமுறைகளை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அரசாங்கம் இரத்துச் செய்துள்ள சூழ்நிலையில், இவ்வறிவிப்பை தொழிற்சங்கங்கள் விடுத்துள்ளன.

இந் நிலையில்,ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் குறத்து ஆராய நியமிக்கப்பட்ட செயற் குழுவின் உத்தேச அறிக்கை தொழிற்சங் கங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும், இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்ட சம்பள உயர்வு போன்ற விடயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என தொழிற்சங்கக் கூட்டமைப்பின் அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் மேலும் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தி)

## நல்லூர் ஆலயச் சூழலில்

# சுகாதாரமற்ற தின்பண்டங்கள் கைப்பற்றி அழிக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயச் சூழலில் சுகாதாரமற்ற முறையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்களினை பிரதம சுகாதாரப் பரிசோதகர் ஆ. ஜீவநாதன் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் கைப்பற்றி அழித்தனர்.

நல்லூர் ஆலய உற்சவத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொள்வதால் சுகாதாரமற்ற முறையிலும் காலாவதியான பொருட்களும் விற்பனையாவதைத் தடுக்கும் நோக்கிலேயே சுகாதாரப் பரிசோதகர்கள் இத் திடீர் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதே வேளை நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள விற்பனை நிலையங்களின் உரிமையாளர்களுக்கும் சுகாதாரப் பகுதியினருக்குமான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் நல்லூரில் நடைபெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் ஆலயச் சூழலில் சுகாதாரமான முறையில் உணவுப் பண்டங்களைப் பேணுவது பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. (த)

### முஸ்லிம்களுக்கென...

இதேவேளை இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வின் ஓர் அம்சமாகவும், நீண்டகால செயற் திட்டமாகவும் நாடு தழுவிய ரீதியில் இன அமைப்பு ரீதியாக பொலிஸ அமைப்பினை உருவாக்குவது குறித்து பிரதமரும் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் நேற்றைய சந்திப்பின் போது ஆராய்ந்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் போது விடுதலைப் புலிகளிடம் கலந்து உரையாடுவது எனவும் பிரதமர் தீர்மானித்துள்ளதாகவும் தெரிய வருகிறது. (ம)

### குற்றச் செயல்களை ஆராய..

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இது தொடர்பாக எவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாயின் அவர்களது பெயர்களையும் குறிப்பிடுமாறு ஜனாதிபதி ஆணைக்குழுவைப் பணித்துள்ளதாகவும் அறியப் படுகிறது. (ம)

## டக்ளஸ்-சித்தார்த்தன் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை,ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தனும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர் . நேற்று ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற இச்சந் திப்பில் ஜனாதிபதியின் வடக்கு கிழக்கு பிரிப்புத் தொடர்பான கருத்துக்கு இருவரும் தமது ஆட்சேபங்களைத் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்த்தனா ,ஆர்.பிரேமதாஸா, ,டி.பி.விஜயதுங்க ஆகியோர் கூட வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றும் இருவரும் ஜனாதிபதிக்கு சுட்டிக் காட்டியுள்ளனர். பல மணி நேரம் இடம் பெற்ற இச்சந்திப்பில் மாற்றுக்கருத்துடைய தமிழ்க்கட்சி உறுப்பினர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்களுக்குரிய பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் இருவரும் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டனர். (இ)

### நல்லூர்த்...

பட்ட வேளை கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரும் அனுராத புரத்தைச் சேர்ந்தவர்கள்.

இதேவேளை அடையாள அட்டைகள், சைக்கிள் திறப்புகள், பணப்பை, மற்றும் சில தங்க ஆபரணங்கள் ஆகியன கண்டெடுக்கப்பட்டு உற்சவ கால பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ)

### பரிஸ்...

கால நிர்வாக சபைத் திட்டவரைவிற்கும், விடுதலைப் புலிகள் தயாரித்துவரும் பதில் வரைபிற்கும் இடையிலான வேறுபாடுகளை அவர் கவனித்து வருகிறார்.

இதேவேளை, நடந்து முடிந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு சமஷ்டி தொடர்பான கருத்துக்களை எடுத்துக் கூறிய கனடிய சமஷ்டிப் பேரவையின் தலைவர் ஹெவ்றே மற்றும் உறுப்பினரான பேராசிரியர் டேவிற் ஹமறோன் ஆகிய இருவரும் நேற்றுக் காலை புலிகளின் பரிஸ் மாநாட்டில் கலந்துகொண்டு தமது ஆலோசனைகளையும் முன் வைத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் உட்பட சர்வதேச சட்ட வல்லுநர் கூடி ஆராய்ந்து தயாரிக்கப்படவிருக்கும்இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பதில் வரைவு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவரின் அங்கீகாரத்தின் பின்னர் நோர்வே அரசு மூலமாக இலங்கை அரசிடம் கையளிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறு இருக்க, இடைக் காலநிர்வாக சபைத் திட்டவரைவு குறித்து ஆராய்ந்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும், மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி கருணா அம்மானையும் பிரான்சுக்கான நோர்வேத் தூதுவர் நேற்று மாலை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ள போதும் அவர்கள் என்ன பேசி னார்கள் என்பது தெரியவரவில்லை. (ம)


## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபானு வருடம் ஆவணி மாதம் 12ம் நாள் 29-08-2003 வெள்ளிக்கிழமை பகல் 9.24 முதல் 10.01 வரையுள்ள துலாலக்கினமும் உத்திரட்டாதி நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது செல்வப் புதல்வன் திருநிறைச் செல்வன் **குகதாசன்** அவர்கட்கும்



எமது செல்வப் புதல்வி திருநிறைச் செல்வி **துயாநிதி** அவர்கட்கும்

மாங்கல்ய தாரணஞ் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் இறைவன் திருவருள் துணைகொண்டு நீர்வேலி அருள்மிகு செல்லக் கதிர்காம கோவிலில் நடைபெறும் திருமண வைபவத்திலும் மணமகன் இல்லத்தில் நடைபெறும் வரவேற்பு உபசாரங்களிலும் தாங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.அ.சுப்பிரமணியம் அரியமலர் தம்பதிகள்
சு.உதயதாஸ் தம்பதிகள்
நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

திரு.உலகநாதன் புவனேஸ்வரி தம்பதிகள்
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

(இரு வீட்டார் அழைப்பு) [C/6582]



## இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்

இயற்கை மூலிகை சிகிச்சை மூலம் ஆஸ்துமா, உடல் பருமன் உடல் மெலிவு, சலரோகம், மூலவியாதி, முகப்பரு, இளநரை, தலைமுடி உதிர்தல், மாதவிடாய்ப் பிரச்சினை, தலையிடி, வாதம், நாரி உளைவு, கைகால் விறைப்பு, தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாக குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

ஆண்மைக்குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
Dr.R.K.நவனீதன DYNS. SMF, NC
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
பெருமாள் கோவிலடி வீதி,
யாழ்.பயணியர் விடுதி,
(வெலிங்ரன் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

யோகாசன CDகளை பெற்றுக் கொள்ளலாம்

முகாம் நடைபெறும் நாள்கள்:
ஒகஸ்ட் 23ஆம் திகதி முதல் செப்ரம்பர் 3ஆம் திகதிவரை

[C/6585]


## யாழ்.மாநகர சபை மீள் கேள்வி

## அறிவித்தல்–2003

கீழ்க் குறிப்பிட்ட வீதி வேலைகளுக்கான மீள் கேள்விகள் 'இக்ராட்' நிறுவனத்தில் தரம் '10' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி:03.09.2003 பி.ப.3.00 மணி
கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி:05.09.2003 மு.ப. 10.00 மணி
மீள் கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் திகதி:05.09.2003 மு.ப. 10.30 மணி

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு, மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு, கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித்திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லது இதற்கென இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். கேள்விப் பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் தினத்தில் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகம் அளிக்க முடியும். இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் வற் உட்பட |
|---|---|---|
| 1. கொழும்புத்துறை 1ம் குறுக்குத்தெரு | 2000/- | 300/- |
| 2. கொழும்புத்துறை 2ம் குறுக்குத்தெரு | 2000/- | 300/- |
| 3. கொழும்புத்துறை 4ம் குறுக்குத்தெரு (மதகு உட்பட) | 2000/- | 300/- |
| 4. உப்புக் குளம் வீதி, கொழும்புத்துறை | 2000/- | 300/- |
| 5. கொழும்புத்துறை 5ம் குறுக்குத்தெரு | 2000/- | 300/- |
| 6. அருளம்பலம் லேன் | 2000/- | 300/- |
| 7. பொன்னம்பலம் வீதி | 2000/- | 300/- |
| 8. சின்னாலன் கண்டு வீதி | 2000/- | 300/- |
| 9. குகன் வீதி | 2000/- | 300/- |
| 10. முள்ளி வீதி | 2000/- | 300/- |
| 11. ஆள்காட்டி லேன் | 2000/- | 300/- |
| 12. அம்பாள் வீதி நாயன்மார்கட்டு | 2000/- | 300/- |
| 13. பெஸ்கி சனசமூக நிலைய ஒழுங்கை | 2000/- | 300/- |
| 14. தேவரிக்குளம் லேன் | 2000/- | 300/- |
| 15. சீனிவாசகம் வீதி | 2000/- | 300/- |

மாநகர சபை
யாழ்ப்பாணம்.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்

[C/6584]

## யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் யாழ்ப்பாணம்

யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் யாழ்ப்பாணத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 31.08.2003 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றேன்.

[C/6583] -அதிபர்-

## மரண அறிவித்தல்

### நடராஜக்குருக்கள் சதாசிவக்குருக்கள் (சதாசிவம்)

கெருடாவில் தெட்டிலடி கந்தசாமி கோயிலடியைச் சேர்ந்த நடராஜக் குருக்கள் சதாசிவக் குருக்கள் 25.08.2003 அன்று கனடாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜக் குருக்கள், இராஜேஸ்வரியம்மாவின் அன்பு மகனும் பொன்னம்மா(செல்வம்) அவர்களின் அன்புக் கணவரும் சந்தான லட்சுமி(பவானி) விஜயலட்சுமி அமரர் பாலமுரளிதரன், சிவலோஜினி, மோகன்குமார், செந்தில்செல்வி. ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற பராசக்தி அம்மா,மீனாட்சி அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் குகனேஸ்வரன், ஸ்ரீஸ்கந்தராசா(ஸ்ரீ முருகன் கொமினிக்கேசன் உரிமையாளர்) சுரேன்(தினக்குரல் பத்திரிகையாளர்) ஆகியோரின் மாமனாரும், பாலகுமார், பகீரதன், தனுஷா ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் கனடாவில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ஸ்ரீஸ்கந்தராசா (மருமகன்)
(ஸ்ரீமுருகன் கொமினிக்கேசன்)

கெருடாவில்

(C/6586)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.